www.tamilarangam.net

உலகத் தமிழர்களே ஒன்றுபடுங்கள்!

> இயங்கியல் என்பது மிகமிக முழுமையான, ஆழமான ஒரு தலைப்பட்சமாக இல்லாத வடிவத்தல் வளர்ச்சியைப் பற்றி விளக்கி விபரிக்கும் போதனையாகும். நிரந்தரமாக வளர்சசியுற்ற வண்ணமுள்ள பருடபொருளை நமக்குப் பிரதிபலித்துக் காட்டுப பலதத அறிவன் சார்பு நிலையை வலியுறுத்தும் போதனையாகும்
>
> —லெனின்—

# பொதுமை

பதிப்பாசிரியன் : த. கோவேந்தன்

அகவை 2 | 15—1—83 | விலை 50 பைசா | வெளியீடு : 13

# இந்து சமுத்திரமும்-இந்திரா காந்தியும்

## அறிஞர்கள் மாநாட்டின் அறிவுறுத்துரை !

உலக வரலாற்றில் முதலாம் உலக யுத்தமானாலும் சரி இரண்டாம் உலக யுத்தமானாலும சரி, இந்துமாக் கடல ஒரு கேந்திரப் பகுதியாக இருந்ததை அவதானிகக முடியும். பசுபிக் சமுத்திரம், அத்திலாந்திக சமுத்திரம் போலல்லாமல் இதிகாச காலத்திலிருந்து இதன் முக்கியத்துவம் பிரபலமானது. இதனை நன்கு உணாந்தவா இந்தியப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி, இதனாலேயே இநதுமா சமுத்திரம் உலகப் போருக்கு ''களப்பகுதியாக'' இருக்கக் கூடாது என்பலதக் கருதி முன்னாள் இலங்கைப் பிரதமர் திருமதி சிறமாவோ பண்டாரநாயககாவுடன் இணைந்து, இந்தப் பகுதி அமைதியான பிரதேசமாக (Peace zone) இருக்க வேண்டும் என்று குரல் கொடுத்தார். இவ்விரு அம்மையார்களின் முயறசியினால் இந்துமா சமுத்திரம் அமைதி மண்டலமாக இருக்க வேண்டும் என்ற பிரேரணை ஐ. நா.வில் முன் வைக்கப்பட்டது.

திருப்பதியில் சனவரி 3-ம் திகதியில் ஆரம்பித்து வைத்த அறிவியல அறஞர்கள் மாநாட்டில் திருமதி இநதிரா காந்தி இரண்டு கருத்துக்களை வலியுறுத்தியுளளார். அதாவது ''இந்து மாககடலை ஆடகொள்ளவும, ஆக்கிரமிக்கவும் வல்லரசுகள் சூடசமமாக சூழ்ச்சி செய்கிறது'' என்று சுட்டிக் கண்டித்தார். அனைத்துலக கடல வளங்கள தொடர்பான சட்டத்தில் ஒப்பமிட குடியேற்றவாதக் கொள்கையை முன்னாளில் கடைபிடித்த சில மேற்கைரோப்பிய நாடுகள் மறுத்து வருவதையும் சுட்டிக்காட்டினார். இதற்கான காரணம் கடல்வளம் தன்னுக்கப்பட்டால் அந்தந்த கடல் சூழப்பட்டுள்ள நாடுகள் பயன் பெற்று விடுமோ என்றும், விடுதலை விரும்பிகளான பாலத்தீனியரும், நமீபியரும், ஈழவரும் ஐ, நா. சபையின் தீர்வுக்கு இணங்க, கடல் வளத்தை பயன்படுத்துபவர்களின் பங்குக்கு உரித்தாகிவிடுவர் என்றும் அஞ்சுவதேயாகும். இதனாலேயே திருமதி. இந்திராகாந்தி ''மனிதாபிமானமும், மக்கள் அடிபபடையிலான சமுதாய நோககமும் இந்தக் கடல் வளங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று கட்டாயபபடுததுகின்றன. அதேசமயம் எங்களுக்குள்ள வளத்தையும் வகையையும் வக்கற்றதாக்குவதற்கு ஏகாதிபத்தியம் துணிச்சலாக முனைகிறது என்பதை நான் அறிவேன்'' என்றார்.

திருமதி காந்தி இக்கருத்துக்களைக் கூற முன்பு விஞ்ஞானிகள் கூறிய கருத்துக்களை ஆற அமர இருந்து கேட்டார். கருத்தரங்கின் தலைவரும், விஞ்ஞானப் பேராசிரியருமான திரு. ராமச்சந்திரராவ், இந்திய பிரதம தலைவரை வரவேற்றுப்பேசும் போது, தரைப் பகுதியிலுள்ள வளங்களை காட்டிலும் அதிகமான வளம் கடலில் உள்ளது என்றும், அதனை மனிதன் ஆக்கிரமிக்க வேண்டும் என்றும'' கூறனார். இக்கருத்து பழந்தமிழன் மனதில் இருந்துள்ளது என்பதற்கு 'கோத்த கடலாரும் கோவா மலையாரும்'' என்ற அடிகளை சான்று பகரும் என்பதை இங்கு நினைவு கொள்ளலாம். திரு. ராவ், திரு. க. நா. சுபபிரமணியம் போன்ற அறிஞர்கள் கூறியவற்றை அவதானித்த திருமதி காந்தி தமது சொற்பொழிவில் திரும்பவும் ''கேந்திரப்'' பிரச்சனைக்கு வந்தார். ''சமுத்திரங்கள் எல்லாம் சமுதாயத்தின் சொத்துடமை என்பது உண்மையே. ஆனால் சமுக நோக்கில் அதனை எப்படிப் பயன்படுத்துவது என்பதற்கு தீர்க்கமான ஆய்வுகள் மூலமே முடிவு செய்ய வேண்டும்'' என்றார்.

இந்த மாநாட்டின் பேருரைகளையும், திருமதி இந்திராவின் சொறபொழிவையும் அவதானத்த பொதுமையின் அரசியல ஆய்வாளர், தமது கருத்தையுப தொனிப்பாக முன் வைக்க விருப்புகிறார். இந்தியா இன்னமும சிதறுபின்னப் படாமல் இணைத்துப் பிணைத்து வைத்திருப்பவர் தருமதி காநதியே என்பது யதார்தத நிலையில் புலப்படுகிறது இந்தியா தனித்தனி மாநிலங்களாகப பிளவு படாமல் ஒரு அரசியல் ஒனறயம் ஏறபடக் காரணமாக இருந்தவர்களில் ஒருவர் திருபதி காநதியின் தநதை திரு ஜவகர்லால் நேருவாகும் இது குறித்து எத்தகைய கருத்து வேறுபாடு இருப்பினும் சோவியத் ஒனறியம ஏறபடுவதற்கு காரணமாக அமைந்த அடிபபடைப் புரட்சிபோல இங்கு ஏற்படவில்லை என்பதை யாரும் மறுக்கமுடியாது. இருந்தும் பூர்சுவா ஜனநாயகப் புரட்சி அடிப்படையிலான சுதந்திரம் என்ற பெயரில் ''பல தேசிய இனங்கள்'' ஒன்றியங்கும் அரசியல் தேசிய ஒன்றியம் ஒன்று ஏற்பட்டது. ஆனால் தமது அரசியல் அதிகார வரம்பிற்கு உட்பட்டளவில் கூட இநத மாநிலங்களின் ஆட்சிகள அடிபபடை மக்களின நலனைப் பேணுவதில் வக்கறறுப் போயுள்ளன. இதனைப பயன்படுத்தி மாநில வெறியைக் கிளற இந்தியாவைச் சின்னபின்னப் படுத்த ஏகாதிபததியங்கள் எடுக்கும் முயறசிக்கு உதாரணமாக அணமைத தேர்தல் முடிவுகள் அமைநதுள்ளன. அணமைத தேர்தல முடிவுகள் அமெரிக்கச் செல்வாககின் அதிகரிடபை புலபபடுத்துகிறது. இதன் மூலம் இந்தியாவை நெருக்கடி நிலைக்குத் தள்ளி விட ஏகாதிபத்தியம் விரும்புகிறது. ஏனெனில் உலகரங்கில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களை இந்தியா ஆதரித்து வருவதும் அணி சேரா நாடுகளிடையேயும் மூன்றும் உலக நாடுகளிடையேயும் இந்தியாவின் மதிப்பு அதிகரித்தும் இருப்பதேயாகும். இம் மதிப்பை இழக்கச் செய்யவே ஏகாதிபத்தியங்கள் முனைகின்றன.

இன்று உலகத்தின் முழுககவனத்தையும் ஈர்த்து இடைவிடாமல் தமது விடுதலைக்காக போராடி வருப பாலத்தீனியர் விடுதலை இயக்கத்தையும், நமீபியாவின் விடுதலைப போராடடத்தையும் இநதிராவோ, இநதியாவோ ஆதரிக்கத் தவறியதில்லை. லெபனானில் அணமையில் நடந்த கொடுமைகள் பாலத்தீனய விடுதலை இயக்கத்தை சிதறடித்ததாக நினைப்பது பேதமை பாலத்தீனியர்களுக்கு தாயகம் அமைய வேண்டியதின் அவசியம் காப்டேவிட் உடன்படிக்கை மூலம் அமெ

8ம் பக்கம் பார்க்க



நல்ல கருத்துகளின் பிடிப்பு! நாட்டிலே எழுப்பும் துடிப்பு!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மதமாற்றம் தமிழக மக்களுக்கு நன்மை தருமா?

—பேயன்—

*—சென்ற இதழ் தொடர்ச்சி—*

மாலியம் தமிழ் நாட்டில் நிகழ்த்திய சில கொடுமைகள் பற்றி மேலே நாம் சில வரலாற்றுச் செய்திகள் கண்டோம். மேலும் அறு மதம் எனப்படும் இந்து மதப் பிரிவுகளில் சிவனியம், குமரம், என்பவை தவிர ஏனையவை தமிழ்நாட்டுக்குள் இறக்குமதியானவையே. அனைத்து மதங்களுக்கும், புத்தம், சமணம் உட்பட, தமிழகத்திலேயே கருதோன்றியதாகக் கருத முடியுமேனும் மதங்கள் என்ற வடிவில் தமிழ் நாட்டிற்குள் வளர்ச்சி பெற்றவை சிவனியமும் குமரமுமே. ஆயினும் அவை இரண்டும் கூட பொதுமக்களின் மதங்களாயிருக்கவில்லை. அனைத்துமே-உள்நாட்டு வெளிநாட்டு மதங்கள். அனைத்துமே-மேல் வகுப்பினரிடமே நின்றன. அவர்களிடையிலான ஆதிக்கப் போட்டிகளின் விளைவாகவும் வெளிப்பாடாகவும் இருந்தன.

அப்படியாயின் தமிழ்ப் பாட்டாளி மக்களின், அடிப்படை மக்களின் மதம்தான் யாது? உண்மைத் தமிழ் மக்களின் மதம் சிறு தெய்வ வழிபாடே. உயிர்ப்பலியுண்டு, நாட்டுப்புறக் கலைகளை இன்றும் பேணி வரும் இச் சிறு தெய்வ வணக்கமே தமிழரின் உண்மையான மதம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற இந்த ஓயாத மதப்பூசல்களாலும் அரசியல் போர்களாலும் கொலை, கொள்ளை, கற்பழிப்புகளாலும் இந்த மதத்தை அழிக்க முடியவில்லை. அதாவது இந்த மக்களின் அடிப்படை வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதற்காக இந்த இரண்டாயிரமாண்டு குமுக வினைப்பாடு எதுவுமே செய்யவில்லை. மேல் மட்டத்தாரின் உட்பகைகளில் உள்ளவற்றையே சிதைக்கவும் சீரழிக்கவுமே அது பயன்பட்டது.

இவ்வாறு அடிப்படை மக்களின் அல்லல் தீர அயல் நாட்டிலிருந்து ''மீட்பர்களை'' எதிர்பார்த்து ''புரட்சியின் இறக்குமதியை'' எதிர்பார்த்து காத்து நிற்பது தமிழகத்து அறிவுத் துறையினரின் ''தேசியப் பண்பாக'' இருந்து வந்திருக்கிறது. ஒரே நாளில் மூவாயிரம் மீனவரை ஓர் அயல் நாட்டுத் துறவி திரட்ட முடிந்தது. ஆனால் ஓர் உள்நாட்டுத் தலைவன் அவர்களைத் திரட்டவில்லை. இராமலிங்கர் போன்ற மதச் சீர்திருத்தக்காரர்கள் இருக்கும் மதங்களைக் குழப்பி புதுக்கலவைகளை உருவாக்கினரேயன்றி யூதேயா, கிறித்துவம் இசுலாமியம் போன்று இம்மண்ணின் மக்களின் விடுதலைக்கேற்ற ஒரு சமயத்தையோ, இயக்கத்தையோ உருவாக்க முடியவில்லை. இவ்வாறு இன்றைய மதமாற்றத்துக்குப் புரட்சி மூலாம் பூசுவதன் மூலம் தோழர் குணா தமிழக அறிவுத் துறையினரின் ''இயற்பண்பில்'' இருந்து தம்மால் முறித்துக் கொள்ள இயலவில்லை என்பதைக் காட்டுகிறார்.

உண்மையில் இந்து, இசுலாம், கிறித்துவம் ஆகிய மூன்று மதங்களும் தமிழகத்தில் நிகழ்த்துவதென்ன? அண்மைக்கால வரலாற்றைப் பார்ப்போம். 'திராவிட மரபினரின்' அரசியல் சிதையத் தொடங்கு முன் இங்கு இம் மூன்று மதங்களும் மக்கள் மனங்களிலிருந்து நழுவிக் கொண்டிருந்தன. மதவேறுபாடின்றி மக்கள் தமிழ்-தமிழினம், தமிழ்நாடு என்ற உணர்வில் ஊறித் திளைத்தனர். திராவிட மரபினரின் பண்புச் சிதைவு முற்றுப் பெற்றது 1969-இல் என்று கொள்ளலாம். வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. வணிக முதலாயிருந்து தொழில் முதலாக மாறத் துவங்கியிருந்த தமிழகத்தின் பொருட்குவைக்கு வேட்டு வைக்கப்பட்டது. தமிழகத்தில் அதுவரை இருந்த தேசிய முதலாளியம் அழிந்தது வடநாட்டு முதலின் ஆதிக்கம் நிலை நிறுத்தப்பட்டது. தி. நகர் பிள்ளையார் கோவில் தோற்றத்தில் வெளிப்பாடாகிய மார்வாடிகளின் 'இந்து மத' ஆர்வமும் முனைப்பும் தெற்கே குமரியில் விவேகானந்தர் மண்டபமும் இருகோடிகளிலிருந்து தமிழகத்தை நெருக்கின. கண்ணதாசனின் ''அர்த்தமுள்ள இந்து மத'' வரிசை மக்களின் மனதில் நஞ்சூட்டியது. இதற்கு இணையாக வெளிநாடுகளிலிருந்து கிறித்துவ இசுலாமிய மத நிறுவனங்கள் கோடி கோடியாய்ப பணத்தைத் தமிழகத்தினுள் இறக்குமதி செய்தன. இந்தப் பணத்துக்குக் கூலியாளாகி விட்ட ''மதப் பணியாளர்கள்'' மக்களை மதமயக்கத்தில் இடையறாது அழ்த்தினர். அதன் விளைவுகள் முரண்பாடுகளை மதமாற்ற வடிகால்களில் வடித்தன. ஆனால் இதற்கு ஒரு நற் கூறு இல்லாமல் இல்லை. இம் மத மாற்றங்களும் மதப் பூசல்களும் தமிழக மக்களைக் கவலை கொள்ள வைத்துள்ளன. சிந்திக்க வைத்துள்ளன. மதமாற்றம், சாதிப்பூசல்கள், மதப் பூசல்களின் அடிப்படைகளைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனைகளை உருவாக்கி விட்டிருக்கின்றன. இந்த இயங்கியல் எதிர்மறை விளைவுதான் தமிழகத்தைப் புரட்சியை நோக்கி இட்டுச் செல்லுமே தவிர தோழர் குணா கருதுவது போன்று மதமாற்றம் தானே நேரடியாகப் புரட்சிக்கு இட்டுச் செல்லாது. இந்த எதிர் முனையைக் கண்டு பிடித்து வளர்த்தெடுக்க வேண்டியது தான் நம் பணி. மாறாக மத மாற்றம் புரட்சியின் முதற்படி என்று மதமாற்றத்தரகர்களின் மனநிலையை அடைவது நமக்கு நல்லதல்ல.

இதே வேளையில் இசுலாமிய மதமாற்றத்தின் அனைத்துலகக் குறித்தகவைப் பற்றி நாம் சிறிது நோக்குவோம். இசுலாம் தோன்றிய அரேபியநாடு பாலைவனங்கள் நிறைந்தது. பாலை நிலங்களில் இரு வாழ் முறைகளே இருக்க முடியும். ஒன்று கொள்ளை, இன்னொன்று வாணிகம். இதனால்தான் அரேபியர் வரலாறு தோன்றிய நாளிலிருந்தே கடல் வாணிகத்தில் சிறந்து விளங்குகின்றனர்; நாகரிகத்தை உலகத்தில் பரவச்செய்வோராக ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு ஏற்றுமதி செய்வோராக இருந்து வந்துள்ளனர்.

**இந்த அடிப்படையில் வாணிகர்களுக்கேற்ற, வெறும் வாணிகத்தால் மட்டும் வாழ்கின்ற ஒரு மக்களுக்கேற்ற ஒரு மதத்தை அவர்கள் நிறுவினர்.** வாணிகர்களிடமிருந்து இரவலராகவோ வீட்டு அடிமைகளாகவோ மக்கள் வாணாளைக் கழிக்க வேண்டிய ஒரு குமுக அமைப்பாக அது இருந்தது. அச்சனும் மதத்தலைவனும் ஒருவனாக இருந்தான். நாடு அரசனின் உடைமையாக மாறியது. மக்களும் அவனுக்குச் சொந்தமானவர்களே. எடுத்துக் காட்டாக இன்றும் சவூதி அரேபியாவில் ஆட்சிப் பொறுப்பிலிருப்பவர் அனைவரும் ஒரே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களே.

இந்த அடிப்படையிலமைந்த குமுக அமைப்புக்கு கன்னெய்ய (பெட்ரோலியம்) கண்டு பிடிப்பு அறைகூவலாயமைந்தது. இரவலர்களாகவும் எடுபிடிகளாகவுமிருந்த நிலையிலிருந்து மக்கள் விடுபட்டனர். ஏற்கனவே நாட்டைச் சொந்தமாக வைத்திருந்த சேக்குகளுக்கும் எமிர்களுக்கும் இது குழிபறிக்கத் தொடங்கியது. ஆனால் இந்த ஆதிக்க ஆற்றல்களுக்கு இசுரேல் நாடு அமைந்தது ஒரு நல்வாய்ப்பாய் வந்து சேர்ந்தது. அரபு இன உணர்வை மக்கள் மனத்தில் வளர்த்துத் தம் மேலாதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர் அராபியத் தலைவர்கள். தம் பழைய செல்வாக்குக்கு மக்களியக்கங்களிடமிருந்து ஊறு நேர்ந்து விடாமல் காப்பதற்காகவே இவர்கள் உலகப் பிற்போக்கு ஆற்றல்களின் தலைமையகமாகிய அமெரிக்காவிடமிருந்து தம் உறவை முறித்துக் கொள்ளத் துணியவில்லை. இதன் விளைவாக இசுரேல் வெல்ல முடியாத ஒரு பேராற்றலென்றும் அரேபியர்கள் கையாலாகாதவரென்றும் ஒரு போலி உணர்வு உலகில் ஏற்பட்டு விட்டதைப் பற்றியும் இவர்கள் கவலைப்படவில்லை. பாலத்தீனிய மக்கள் இசுரேலிய வெறியரால் வேட்டையாடப்பட்டுக் கொண்டிருக்கும் போது இவர்கள் வெறும் மாநாடுகள் போட்டு பூச்சாண்டி காட்டிக் கொண்டிருப்பது கையாலாகாத்தனத்தாலல்ல, தம் தலைகளில் தாமே மண்ணை அள்ளிப்போட்டுக் கொள்ள விரும்பாததாலேயே.

இசுரேலின் ''எல்லாம் வல்லமை'' முகமதிய மதத்துக்கே பெரும் அறைகூவல் என்ற உணர்வை அரபுத் தலைவர்களின் இவ்வுத்தி உலக முசுலிம்களின் நெஞ்சில் ஏற்படுத்திவிட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டு கன்னெய்யக் காசுகளை அள்ளிவீசி மதம் பரப்பும் தரகர்களை இந்தியா போன்ற நாடுகளில் உருவாக்கி ஏற்கனவே மதம் மாறியவர்களை மதவெறியர்களாக்கி, புதிய வெறியர்களை உருவாக்கி வருகின்றனர். அத்தோடு எதிர்காலத்தில் அரேபியர்கள் நிறுவத் திட்டமிட்டிருக்கும் அரேபியப் பேரரசுக்கு குடியேற்ற நாடுகளை இந்நாடுகளுக்குள் உருவாக்கவும் இது உதவுகிறது. இவ்வாறு இந்நிகழ்முறை உலக முற்போக்கு ஆற்றல்களுக்கு ஒரு பெரும் அறைகூவலாக அமைந்துள்ளது.

முசுலிம் பெருமக்கள் தாய் நாட்டுப் பற்றில் யாருக்கும் சளைத்தவரில்லை என்பதை இந்திய விடுதலைப் போரின்போதும் திராவிட இயக்க எழுச்சியின் போதும் காட்டி விட்டனர். ஆயினும் உலகிலும் இந்தியாவினுள்ளும் தம் மதம் 'நெருக்குண்டு' வருவதாக அவர்களுக்கு ஒரு போலி உணர்வு ஊட்டப்பட்டு அவர்கள் மனந்திரும்பி விடுவார்களோ என்று நாம் அஞ்ச வேண்டிய சூழல் உருவாக்கப்பட்டு விட்டது.

இது போன்ற உலகச் சூழலில் இந்தியாவினுள் அயல் மதங்கள் நுழைவதில் பிற்போக்கு ஆற்றல்களுக்கு ஒரு நல்வாய்ப்பு உள்ளது. உலகிலுள்ள சிறுபான்மை மக்கள் சிக்கல்களின் பெரும்பான்மை மதப் பூசல்களாகவே வெளிப்படுகின்றன. இம்மத வெளிப்பாடு அம்மக்களுக்கிடையிலுள்ள பிணக்குகளைக் குறைப்பதற்கு ஒரு பெரும் தடையாக நின்று அம்மக்களை மேற்கொண்டு நகரவிடாமல் முடக்கி வைத்திருக்கிறது. அதே விளைவை ஏற்படுத்துவது, அது இசுலாமியம் பரவி ஏற்பட்டாலும் சரி கிறித்துவம் பரவி ஏற்பட்டாலும் சரி உலகப்பிற்போக்கு ஆற்றல்களின் தலைமைப் பொறுப்பிலுள்ள அமெரிக்காவுக்கு மகிழ்ச்சி தருவதோடு அதுவே அதன் நோக்கமுமாகும். அது தான் இன்று தமிழகத்தினுள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த அடிப்படையிலும் மத மாற்றத்தைப் பற்றிய தோழர் குணாவின் கண்ணோட்டம் எவ்வளவு தவறென்பது புரியும்.

1. மதமாற்றத்தாலும் சாதிப்பூசல்களாலும் தாழ்த்தப்பட்ட மக்களிடையில் உருவாகியுள்ள எதிர்ப்புணர்வையும் விழிப்புணர்வையும் பயன்படுத்தி அவர்களுக்கிடையில் நிலவும் முப்பெரும் பிரிவுகளை, (பள்ளர், பறையர், சக்கிலியர்) மறைய வைக்க வேண்டும்.

2. இந்த நிகழ்முறையில் அவர்களிடையிலிருக்கும் குமுக முற்போக்கு ஆற்றல்களைத் திரட்ட வேண்டும்.

3. 'தாய் மதத்திலிருந்து' மதம் மாறியவர்கள் மீண்டும் 'தாய் மதத்துக்குத்' திரும்பிய நேர்வுகளை ஆய்வுக்குட்படுத்த வேண்டும். இதிலிருந்து நம் மக்களின் உளவியலை அறிய முயல வேண்டும். இவ்வறிவை அவர்களின் குமுக வளர்ச்சிக்கு எவ்வாறு பயன்படுத்த முடியுமென்று பார்க்க வேண்டும்.

4. தேசிய விடுதலை உணர்வுக்கும் மக்களிடையில் சாதிசமய வேறுபாட்டுணர்வின் ஏற்றிழிவுகளுக்கும் ஒரு உறவு இருப்பது அண்மை வரலாற்றிலிருந்தும் பழம் வரலாற்றிலிருந்தும் தெரிவதால் தேசிய விடுதலைச் சிக்கலைக் கையாண்டு மக்களை நெருங்கி வரவைத்து அந்த நிலையை வளர்த்து அவர்களிடையிலுள்ள வேற்றுமையுணர்வுகள் முற்றிலும் மறையும் வரை ஓர்மையுடன் வினைப்பட வேண்டும்.

*7-ம் பக்கம் பார்க்க*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேர்காணல்

# ஈழம் - விடுதலைபற்றி ஒரு தோழரின் கருத்துகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

*வினா: தாங்கள் மலையகத் தமிழ் பேசும் மக்களுக்கும், ஏனையத் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையிலான உறவு வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். ஆனால், ஈழ விடுதலைக்கான எண்ணப்பாடுகள் அவர்களிடையில் எவ்வளவிற்கு வேரூன்றியுள்ளது என்பதை அறிய விரும்புகிறோம்?*

**பதில்:** நீங்கள் சில விடயங்களைக் கவனமாக நோக்க வேண்டும். இலங்கையில் அவ்வவ்போது கலவரங்கள் ஏறபடும் வேளைகளில் இந்தியாவை நோக்கிக் குடி பெயர்வோரின் தொகை அளவுகளில் அதிகரித்து இருப்பதனைப் புள்ளி விபரங்களை நோக்கினால் நீங்கள் இலகுவில் புரிந்து கொள்ள முடியும். ஆனால், அக் காலங்களில் இங்கே திரும்பியவர்களின் வாழ்வுகள் உத்தரவாத மற்ற நிலையை அவர்களுக்குக் கொடுத்த போது அவர்கள் இலங்கையில் தமது அடிமை வாழ்வையே மாற்றுவதைத் தங்கள் எண்ணங்களில் கொண்டனர். இதனை 1977ம் ஆண்டுக் கலவரத்தின் பின் நன்கு அவதானிக்க கூடியதாக இருந்தது. அக் கலவரத்தில் மலையகம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட போது பலர் வீடுகளை இழந்த போதும் அவர்கள் ஏனைய தமிழ் பேசும் மக்களுடன் இணைந்து கொள்ள முயன்றவராகவும் தங்கள் வாழும் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தாமாகவே மேற கொள்பவராகவும காணப்பட்டனர். அதே வேளையில் அக் கால கலவரத்தில் தமிழகம் திரும்பியவர்களின் தொகையும் மிகக் குறைவாகவே காணபபட்டது. இது அவர்களுடைய எண்ணப் பாட்டின் மாற்றத்யையும் அந்த மண்ணின் மீதுள்ள உடைமைப் பாட்டையும் எமககு வலியுறுததுகிறது.

அத்துடன் அண்மைக் காலத்தைய 'ஈரோஸ்' கருத்துகளின் பாதிடபும், அக் கருத்துகளை எடுத்துச் சென்ற, சென்று கொண்டிருக்கும் முன்னோடித் தோழர்களின் செயல் வேகமும் அம் மக்களின் போக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதனை ஒரு உதாரணத்தின் மூலம் புரிய வைககலாம் என நம்புகிறேன். அண்மைக் காலத்தில் இம் மாற்றத்தை கண்ட தொழிற்சங்க அமைப்புகளில பெரியதான தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், அரசு சார்பு தொழிற் சங்கங்களும், அரசும் மலையக மக்கள் தனித் தேசிய இனம் என்ற பிற்போக்குத் தனமான கருத்துகளை பரப்ப முனைந்துள்ளன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் கல்விப் பிரிவின் வெளியீடான மலையக மக்கள் தனித் தேசிய இனம் எனனும் சிறு வெளியீட்டை உங்களுக்கு தருகிறேன். அத்துடன் தொழிற சங்கத்தலைவராக விளங்கும் தொண்டைமான் தனது சங்க மாநாடுகளுக்குத் தென்னிந்திய நடிகர் — நடிகைகளை அழைத்து கவர்ச்சி விளம்பரம் தேட வேண்டிய அளவுக்குத் தள்ளப்பட்டுள்ளார். இந்த எதிர் விளைவுத் தன்மைகள் (Reactionary actions) உங்களுக்கு அங்கே ஒரு செயல் மாற்றம் நடந்து கொண்டிருப்பதைப் புலப்படுத்தவில்லையா; ஆனாலும் நீண்ட காலமாக அடிமை மனப்பாங்கிலும், தொழிற்சங்க உணர்விலும் வளர்க்கப்பட்ட அப் பாட்டாளி மக்கள் மிக விரைவிலேயே உடமைப்பாட்டுப் போராட்டத்திற்கு முன் வந்து விடுவார்கள் என்பதும் சுலபமாக எதிர்பார்க்கக் கூடியதல்ல.

*வினா: இங்கு நாம் சந்தித்த சிலர் இந்த மலையக மக்கள் வடக்கு-கிழக்கு பகுதிகளில் குடியேறுவதை விரும்புபவர்களாகவும், ஊக்குவிபபவர்களாகவும் இவ்வாறு குடிபெயர்தலே அந்த மக்களின் பிரச்சனைக்குத் தீர்வு என்ற கருத்து அடிப்படையில் செயற்படுபவர்களாகவும் உள்ளனர். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

**பதில்:** முதலில் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும், இன்றைய இம் மக்கள் பிறப்பினால் இலங்கையர் என்பதுவும், ஐந்தாம் தலைமுறையினர் என்பதும் நினைவில் கொள்ள வேண்டியது. அந்த மண் இவர்களால் வளப்படுத்தப்பட்டதென்பதும் இவர்கள் உழைப்பினால் இலங்கை வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதும் அதன் வரலாற்றையும் அரசியலையும் தெரிந்த நீங்கள் மறுகக மாட்டீர்கள். அந்த மண், அவர்கள் வாழும் பகுதி அவர்களுடையதே. அவர்கள் அரசியல் ரீதியில் ஒரு முடிவை எடுக்கத் தகுதி படைத்தவர்களே. ஆதலால் அவர்களை அந்த மண்ணிலிருந்து அப்புறப்படுத்துவதன் மூலம் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் என்னும் கருத்து பிற்போக்கு தனமானது அம்மக்களை அவர்கள் வாழும் பகுதியிலேயே போராட-அணிதிரட்ட வக்கற்றவர்களும், அவர்களை முன்நிறுத்தி ஈழப்போராட்டத்தை முன்னெடுக்கும் போராட்டப் பாதை வகுக்க முடியாத சூன்யவாதிகளாலுமே இப்படிப்பட்ட கருத்துகளை முன்வைக்க முடிகிறது. ஆதலால் அவர்களது இக்கருத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். ஆனாலும் கடநத காலங்களில் நடைபெற்ற இனவெறித் தாக்குதலில் ஆதரவின்றி தவித்த இம் மக்களுக்கு மறுவாழ்வு அமைத்துக் கொடுத்துதவியர்களுக்குக் குறிப்பாக அமரர் கே. சி. நித்தியானந்தா அவர்களுக்கும் அப்பணியை இன்றும் தொடர்ந்து செய்பவர்களுக்கும் நான் என்றும் மதிப்பளிக்கிறேன்.

*வினா: ஈழத்தின் போராட்டத்திற்கான மற்றைய இயக்கங்களின் பங்களிப்பு பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?*

**பதில்:** எமது போராட்டம் இன்னும் ஒரு வடிவத்தைப் பெறவில்லை. ஆரம்பக் கட்டத்திலேயே இருந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் போராளிகளின் சிந்தனைப்பாடே. தமிழர் விடுதலைக் கூட்டணியானாலும் சரி, இல்லை பயங்கரவாதக் குழுக்கள் எனப்படும் புலியானாலும் சரி, மககள் போராட்டத்திற்கான அர்ப்பணிப்பில் தமது பங்கையோ மக்களால் செய்யக் கூடியதையோ, தர்க்கீக ரீதியில இவர்கள செய்யவிலலை. இவர்கள் தங்கள் நலன் சார்ந்த வரம்புகளின் அடிப்படையில் முன்னவர்கள ஜனநாயக முறையிலும், பின்னவர்கள் வன்முறைப் பரீட்சயத்திலும் தமது பங்கைச் செய்துள்ளனர். ஆனால், ஈழ விடுதலைக்கான இவர்களின இடபணிகளை நான் முற்றாகப புறக்கணிககவில்லை. ஏனெனில் பூர்சுவா ஜனநாயகக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வரையறைக்கு உட்பட்ட பங்களிபபைச் செய்துள்ளது. ஆனால், தத்துவார்த்த செயற்திட்ட பின்னனி இன்மையால் சுதந்திரத்திற்கும-சுய நிர்ணயத்திறகும; உரிமைக்கும்—உடமைப்பாட்டிற்கும் வேறுபாடு தெரியாமல் மயங்கி அரசியல் தீர்க்க தரிசனம் எதுவுமின்றி இன்று வங்குரோத்து நிலையை அடைந்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் மீது நான் முற்று முழுதாக இன்னும் நம்பிககையை இழந்துவிடவில்லை. ஆனால் அவர் குறுகிய-சுயநல-சந்தர்ப்பவாத-அரசியல் சேற்றுக்குள் புதையுண்டு தன் ஜனநாயகக் கடமையிலிருந்து தவறிவிடுவாரோ என நான் ஐயுறுகிறேன். இலலாவிட்டால் டேவிட் செல்போன் (David Selborne) என்ற ஆங்கிலேய பத்திரிகையாளரும் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப் பேராசிரியருமான அவருக்கு அளித்த பேட்டியில் அமிர் இப்படிக் கூறிருப்பாரா?

''என்னிடம் இராணுவமும் இல்லை, பொலீசும் இல்லை. ஆதலால் எதன் மூலம் எனது மக்களுக்கு நான் பாதுகாப்பளிக்க முடியும். எனவே அதிகாரத்திலுள்ளவர்களை அணுகி அதன் மூலம் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட முயல்கிறேன்'' என்றும், ''இன்று நான் ஜே. ஆரை நரகத்திற்கு போ என்று சொன்னால் அதற்கு முன் பல தமிழர்கள் சொர்க்கம் சென்றிருபபார்களே'' என்றும், கூறும் அமிரின் கருத்துகளின் அடிப்படையில டேவிட் செல்போன் தனது கருத்தைக் கூறுமபோது ''அவரது (அமிரின்) தலைமையின் நாட்கள் எண்ணப்படுகின்றன'' (The days of Appapillai Amirthalingam the Secretary-General of the Tulf, must be numbered.) என்றார். இந்நிலையையே இன்றைய ஜனநாயகத் தலைமையிடம் காணப்படுகின்றது. இதை நான் விரும்பவில்லை. என்றோ ஒரு நாள் அமிர் தனது கடமையை ஆற்றுவார் என்றே நான் நம்புகிறேன்.

அதே போல் வன்முறை நோக்கில் இயங்கும் எனதருமைத் தம்பிமார்களையும் நான் மதிக்கிறேன். அவர்களது சுய தியாகத்திற்கும நான் தலைவணங்குகிறேன். ருஷ்யாவில் ''டிசம்பரிஸ்டுகள்'' என்ற வன்முறையாளர்களே புரட்சிப் புரவலன் லெனின் புரட்சியில் ஈடுபட காரணமானார்கள் என்பதை நான் மறுககமாட்டேன். ஆனால், இவர்களது இழப்பிற்காக-தியாகத்திற்காக நான் வரலாற்று இயங்கியலை எப்படிப புறக்கணிக்க முடியும்? சமகாலத்து அயர்லாந்து சம்பவங்களை எப்படி சுட்டிக் காட்டாமல் இருக்க முடியும்? ஐரிஷ் குடியரசு இராணுவத்தினுடைய வன்முறைச் சம்பவங்களை விடவா உலகில் எவரும வன்முறையைச் சாதித்து விட்டனர்? ஆனால் இன்னமும் IRA சாதித்தது என்ன என்பதற்கு எவ்வித பதிலை கூறமுடியும்? அவர்களின் அரசியல் இயக்கமான ''சின்பெயின்'' (Sinnfein) க்கும், இராணுவ நடவடிககை குழுவுககுமான தொடர்புகள் பிளவுண்டே காணப்படுகின்றன அதனால் அவர்களின் அரசியல் தீர்வும் இருளாகவே இருக்கின்றது.

உங்கள் கேள்விக்கான எனது பதில் நீண்டு விட்டதற்கு மன்னிக்கவும். ஏனென்றால் இது இன்றைய ஈழத்தின் சமகாலப் பிரச்சினை. இதில் நான் மிகத் தெளிவாக இருக்கவே விரும்புகிறேன். நான் வன்முறையை எதிர்க்கவில்லை ஆனால வன்முறைதான் வழி என்று கருதவில்லை. அது இராணுவ போர்த்தந்திர நடவடிக்கையில் ஒரு பகுதி தானே தவிர, அதுவே போராட்டம் எனக் கொள்ளுதல் முடியாது. இதனை புரட்சிப் புரவலன் லெனினின் வார்த்தைகளிலேயே உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதாவது லெனின் கூறினார்: ''மார்க்சியவாதிகள் அகிம்சாவாதிகள் என நான் கூற வரவில்லை. மார்க்சியவாதிகள பரந்து பட்ட வன்முறைப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். (Marxist spoke out for mass terrorism) அந்த அமைச்சரை இந்த பொலீஸ்காரரை கொலை செய்வதால் நிலைமைகள் மாறப் போவதில்லை. மக்களை அணிதிரட்ட வேண்டும். இவ்வாறு லட்சக்கணக்கான மக்கள் சரியான இலக்கை நோக்கிப் போராட முன் வரும் போது நாம் சரியான முறையில் வன்மையை பயன்படுத்துவோம்.'' இதையே நான் உங்களுக்கு கூறிவைக்கிறேன். ஆனால் இத் தீரம் மிகக வாலிபர்கள் யதார்த்த நிலையை உணர்ந்து தமககிடையேயுள்ள பிணக்குகளைத் தமிழ் மக்களின் பிரச்சினையாக மாற்றமல் இவற்றைக் கைவிட்டு ஒன்றுபட்டு உழைக்க முன் வரவேண்டும் என நான் கூறும் அதே சமயத்தில் இவர்களின் கருத்தில்- செயலில் ஒரு தரமாற்றம் (Qualitative change) பெற்று அடுத்த கட்டமான மக்கள் போராட்டத்திற்கு வர வேணடும எனவும் விரும்புகிறேன்.

இவற்றைவிட மாணவர் இயக்கமும் ஈழத்தில் இளைஞர்கள் மத்தியிலான கருத்து மாற்றத்தில் பங்களிப்பு செய்துள்ள தெனினும். இவர்களது செயறபாடுகள் ஈழப் போராட்டத்தின் முன்னெடுப்புகளாக இருக்க முடியாது என்பதையும், இவர்களது நடவடிக்கைகள் ஒரு கட்டத்திற்கு மேல் தங்கள் வரையறைகளை மீற முடியாமல் போராட்ட எதிர் சக்திகளாக மாறக்கூடிய நிலைமையையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதுவும் ஓர் அரசியல் நெறிப்பாடடைந்த அரசியல் இயக்கத்தின் அங்கமாக இவர்கள் செயற்படவில்லை

(6-ம் பக்கம் பார்க்க)

www.tamilarangam.net



# ஈழம்-அனைத்துலக அரங்கில்

*இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை, இலங்கைப் பாராளுமன்றத்துத் தமிழ்ப் பிரதிநிதிகள் அவ்வப்போது வெளிநாடுகளிலுள்ள அனைத்துலகப் பாராளுமன்ற சம்மேளனக் கூட்டங்களிலும், ஏனைய அவையிலும பங்கு பற்றும் போது, 'நாடு தழுவிய பிரச்சினைகளில் ஒன்றாகத் தமிழ் பிரச்சினையை முன் வைத்துள்ளார்கள்' என்பது உண்மை. இவர்கள் தமிழர் பிரச்சினையை வெறும் உரிமைப் பிரச்சினையாக மட்டுமல்லாமல் "இன விடுதலைப்" பிரச்சினையாக உலக அவையில் வற்புறுத்தி வருவது அவர்களுடைய தவிர்க்க முடியாத பொறுப்பை எடுத்துக் காட்டுகிறது. இவற்ருல் உலக அரங்கில் தமிழர் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாக தெரியப்படுத்தப் பட்டதேயன்றி, ஏனைய நாட்டு மக்கள் அறியக் கூடிய வகையில் உலகரங்கில் பரவலாக முன் வைக்கப்படவில்லை.*

*எரித்திரிய விடுதலை தொடர்பாக ரியூனிஸில் (Tunis) கடந்த டிசம்பர் 2, 3, 4ம் திகதிகளில் நடைபெற்ற மாநாட்டில் ஈழ ஆய்வாளரான திரு. பாபு. சுதிர்தரன் அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது. விடுதலைக்குப் போராடும் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் கூடிய உலக மாநாடொன்றில் (INT forum on Eritria) ஈழப்பிரச்சினை முன் வைக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.*

—0—

## நண்பர்களே! தோழர்களே!

இந்த மாநாட்டுக்கு என்னை அழைத்தற்காக இந்த மாநாட்டு அமைப்புக் குழுவினர்க்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அந்த நன்றி என்னை அழைத்தற்காக அல்ல; ரியூனிஸ் வர வாய்ப்பு தந்தமைக்கும் அல்ல; பல நண்பர்களை - தோழர்களைச் சந்திக்கும் வாய்ப்பு தந்தமைக்காக மட்டுமல்ல; ஆனல் எனது நம்பிக்கையிலும், நான் என்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் பணியில் எனது பங்களிப்பை வலிமைப் படுத்துவதற்கும், சேகுவேரா கூறியதுபோல, "இந்த முக் கண்டத்து மக்கள் ஒருமைப்பட்டால், அந்த ஒருமைப் பாட்டால் அவர்களின் ஒற்றுமை வலிமை பெறும். அந்த வலிமையினைப் பெற்ருல் ஏகாதிபத்திய ஆட்சியை அகற்றி விடமுடியும்." என்ற ஒரே ஒரு நம்பிக்கையில்தான் நன்றி செலுத்துகிறேன்.

இந்த மாநாட்டின் நோக்கத்தை அவதானிக்கும் போது ஏகாதிபத்தியத்தின் அவலங்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் ஏகாதிபத்தியத்தைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிரேம். இதைப் புரிந்து கொள்வதற்கு மார்க்சிய இயங்கியல்தான் உதவி புரிகிறது.

வரலாற்று ரீதியாக உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி காரணமாக ஒரு சமூக அமைப்பிலிருந்து வளர்ச்சி பெற்ற புதிய அமைப்பு தோன்றுவதும், உதாரணமாக நிலவுடைமை அமைப்பிலிருந்து, முதலாளியமும், முதலாளியத்திலிருந்து ஏகாதிபத்தியமும் தோன்றியதைக் குறிப்பிடலாம். முதலாளியம் பெற்றெடுத்த இரட்டைக் குழந்தைகள்தாம் பணவீக்கமும் வேலை இல்லாத்திண்டாட்டமும். அதே போல அடக்கு முறையும், சுரண்டலும் தான் ஏகாதிபத்தியத்தின் அம்சங்கள் ஆகும்.

கோடிக்கணக்கான மக்களுக்குத் துன்பத்தையும் வறுமையும் கொடுக்கக் கூடிய போரே இவ்விரண்டினிடையேயும் காணப்படும் ஒற்றுமையாகும். இந்த ஏகாதிபத்தியத்தின் கால கட்டத்தில் அதன் ஒடுக்குமுறையும், உறிஞ்சும் தன்மையும் பல போர்களை, உலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் தோற்றுவித்துள்ளன. இதில் நன்கு தெரிந்ததும் 1-ஆம் 2ம் உலகப் போருக்குப் பின் உலகத்திற்கு அப்பட்டமாகத் விளங்கியதும் மத்திய கிழக்கில் திரும்பத் திரும்ப நிகழும் பாலத்தீனியரின் சிக்கல்தொடர்பானபோர் ஆகும். இதுபோக தென் ஆப்பிரிக்காவிலே பெரும்பான்மையான கறுப்பர்கள் சிறுபான்மை வெள்ளையருக்குஎதிராக நடத்தும் போர். அதே சமயம் இனவெறி ஆதிக்க தென்னுபிரிக்கா, நமீபியா போராளிகளுக்கு எதிராக நடத்தும் மிக சூழ்ச்சிகரமான போர். இதை விட மிகவும் தூரக்கிழக்கு நாடான பிலிப்பைன்சில் சிறுபான்மை முசுலீம் மக்கள் நடத்தும் போராட்டம். அதற்கடுத்தாற்போல் இந்தோனேசியாவில் கிழக்குத் தீமோர் மக்கள் நடத்தும் விடுதலைப் போராட்டம். இவையெல்லாம் உங்கள் கவனத்தை ஈர்த்திருக்கும் என நம்புகிறேன். பக்கத்திலுள்ள "மொரோக்கோ" வில் முன்னைய ஸ்பானிய ஆட்சியின் பிடியிலிருந்து விடுபட்ட சகாரா மக்கள் நடத்தும் போராட்டமும் அதே போல் ஆபிரிக்காவின் முனை என்று கூறக் கூடியப்பகுதியில் எரித்தியா மக்கள் தேசிய தன்னுட்சி கோரி நடத்தும் போராட்டமும் நீங்கள் அறிந்ததே. இலத்தீன் அமெரிக்காவைப் பார்ப்போமோனல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து தம்மை விடுவிப்பதற்காக வீரம்மிக்க சல்வடோர் மக்கள் நடத்தும் போராட்டத்தை யாரும் மறக்க முடியாது. இந்தப் போராடும் மக்கள் வரிசையில் பார்க்கும் போது சுய நிர்ணய உரிமைக்காகத் தத்தளிக்கும் இலங்கைத் தமிழர்தம் பிரச்சனையும் உலகத்தின் பல்வேறு பாகங்களில் இவ் உரிமைக்காகப் போராடும் மக்கள்—கேடிஷ்போன்ற தேசிய இனங்கள் நடத்தும் போராட்டத்தோடு சேர்க்க விரும்புகிறேன். இந்த அனைத்துப் போராட்டங்களிலும் காணக்கூடிய பொதுவான ஒற்றுமை இவையாவும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்டவை என்பதே.

இந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம்தான் இன்று இங்கு முற்போக்கு வாதிகளையும், அவர்கள் பிரதிநித்திதுவப் படுத்தும் மக்களையும் ஒன்றிணைத்துள்ளதோடு என்னையும், இம் மாநாட்டில் கலந்து கொள்ள வைததுள்ளது இல்லாவிட்டால் தெற்கு ஆசியாவிலுள்ள இலங்கைத் தீவிலிருநது நான் வந்து கலந்து கொள்வது எங்ஙனம்? இங்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்; இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உழைப்பின் சின்னமான தேயிலைதான் நீங்கள் மிக விரும்பி அருந்தும் "சாய்" (Chai) என்பதாகும் இந்தச் சுவைநீரை உங்களுக்களித்த அவ் உழைக்கும் மக்களின் விடுதலையைக் கருதித் தான் நான் இங்கு வந்துள்ளேன்.

அடக்கி ஒடுக்கப்படுகின்ற சிறீலங்காவின் மக்கள் அதிலும் ஈழத் தமிழ்ப் பெருங்குடிமக்கள், அடக்கு முறையையும் ஒடுக்கலையும் நாள் தோறும் நேர் கொண்டிருக்கும் இம்மக்கள் உலகச் சிக்கல்களையும், அடக்கு முறைக்கு எதிராக நடத்தும் போராட்டங்களையும் நன்கு அறிந்துள்ளனர். அதன் மூலம் அவர்கள் உலகத்தில் விடுதலைக்குப் போராடும் மக்களுக்கு தங்களது மேலான நல்லாதரவை தெரிவிக்க விரும்புகிருர்கள் அந்த அடிப்படையிலேயே நான் மிகத் தெளிவாக இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புவது என்னவென்ருல் எரித்திரிய மக்களுக்கும், பாலத்தீனிய மக்களுக்கும் இந்த மக்களுடைய போராட்ட ஆதாவு (Solidarity) என்றும் உண்டு. இந்த அறிவிப்பானது தனி நபரின் புலமைத் திறமையான வெளிப்பாடாக அல்லாமல், எங்கள் தொழிலாளரின் தொனிப்பு என்றே கூறுகிறேன். எமது மக்கள் எரித்திரிய மக்களின் சிக்கலை மிகக் கூர்மையாக அணுகி வருகிருர்கள். இதற்கான காரணங்களைக் கூறும் முன்னர் எனது நாட்டைப் பற்றியும், நான் சார்ந்த மக்கள் பற்றியம் கூற அனுமதியுங்கள். இதன் மூலமே எரித்திரிய மக்களின் பிரச்சினைக்கும் எமது பிரச்சினைக்கும் உள்ள தொடர்பினை ஒப்பிட முடியும்.

## சைப்பிரசும் இலங்கையும்

எமது தீவானது இன்று சிறீலங்கா என அழைக்கப்படுவதற்கு முன்பு சிலோன் என்று ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்டதாகும். இது தென்னிந்தியாவிற்கு கீழே அமைந்துள்ளதாகும். ஏறத்தாழ 15 மில்லியன் மக்களையும் 25, 332 சதுர மைல் பரப்பளவையும் கொண்ட இத்தீவு, எவ்வாறு சைப்ரஸ் மத்திய தரைக்கடலில் அமைந்துள்ளதோ, அவ்வாறே இந்து மகா சமுத்திரத்தில் அமைநதுள்ளதாகும். நான் சைப்ரசை உதாரணத்திற்குக் காட்டும் நோக்கம் என்ன வென்ருல், வட ஆபிரிக்காவுள்ள மக்களும் மத்திய கிழக்கில் உள்ள மக்களும், ஐரோப்பாவிலுள்ள மக்களும் சைப்ரசிலுள்ள இனப் பிரச்சினையை நன்கு அறிந்துள்ளனர் என்பதனுலேயே. அதன் மூலம் இந்து சமுத்திரக் கேந்திர நாடான எமது இலங்கைப் பிரச்சினையை நீங்கள்விளங்கிக்கொள்ள முடியும். எப்படி சைப்ரசில் இரு இன வழி மக்கள் இருக்கின்ருர்களோ, அவ்வாறே இலங்கையிலும் சிங்களவர், தமிழர் என இனத்தவர்கள் இருக்கிருர்கள். சைப்ரசில் துருக்கியர்கள் இருப்பதைப் போலவே இலங்கையில் தமிழர்கள் இருக்கிருர்கள் சைப்பிரசில் துருக்கியர்களும் கிரேக்கர்களும் இருப்பதைப் போலவே இலங்கைத் தீவிலும் இரு இன வாரி மக்கள் இருப்பதை நீங்கள் அறிய முடியும். இங்கு தமக்கேயுரித்தான கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்ருேடு வாழ்ந்து வரும் இவ்வினங்கள் பற்றி மேலும் விபரித்து உங்களுக்கு மன உளைச்சலும் அலைச்சலும் தர விரும்பவில்லை பதிலுக்குச் சில அடிப்படை சமூக பொருளாதாரச் சிக்கல்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். துருக்கிய சைப்பிரியர்கள் வடபகுதி சைப்ரசில் வாழ்வதைப் போலவே தமிழர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் மத்திய பகுதியின் வடகிழக்குப் பகுதிகளிலும் இருக்கிருர்கள் அதே போல் சிங்களவர்கள் ஏனைய இடங்களைக் கொண்டவர்கள் ஆவார். ஆனல், அதே சமயம் சிங்களப் பகுதிகளில் தமிழர் "இருப்பிடங்களும்" தமிழர் பகுதிகளில் சிங்களவர் "இருபபிடங்களும்" உண்டு. மேலும் மத்திய மாகாணத்தின் உயர் நிலங்களில் குடியேற்றப்பட்ட மலைப்பகுதித் தமிழ்த் தொழிலாளர்கள், தென்னிந்தியாவிலிருந்து 19-ம் நூற்ருண்டில் பெருந்தோட்டத் தொழிலை வளர்க்கும் முகமாக அங்கே கொண்டு வரப்பட்டார்கள். இவர்களின் வருகையின் பின்னரே இலங்கையில் தேயிலை கோப்பி போன்றவை பயிரிடும் பெருந்தோட்டத் தொழில் ஆரம்பமாயிற்று இதன் காரணமாகவே. நீங்கள் பருகும் தேயிலைநீர் இத்தொழிலாளரின் இரத்தத்தை உறிஞ்சிப் பெறப்படுவது என்ற பொருள்படக் கூறினேன். 48- ஆண்டின் பின்னர் இம் மக்கள் குடியுரிமையும் நாட்டுரிமையும் அற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள் மேற்படி மக்கள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டார்கள் என்பதிலிருந்து இன்னெரு செய்தியும் புலனுகிறது. எப்படி துருக்கிய சிப்பிரியர்களின் தாய் மொழியை, பேசும் மக்கள் துருக்கியில் வாழ்கிருர்களோ, அதே போல் இலங்கை வாழ்தமிழ் மக்கள் பேசும் மொழியை இந்தியாவின் தெற்கிலுள்ள நாலரை கோடி மக்களும் பேசுகிருர்கள். இங்கிருந்து தான் மேற்படி மக்கள் கொண்டு செல்லப்பட்டார்கள் என்பதை மீண்டும் வலியுறுத்துவதன் மூலம், பல கோணங்களில் சர்வதேச அரசியல் முறையில் பார்க்கும் போது ஈழப் பிரச்சனை மத்திய தரைக்கடலிலுள்ள சைப்ரஸ் பிரச்சினைக்கு ஒப்பானது என்பதை எவரும் புரிந்துகொள்ள முடியும் என்பதனுலேயே. இந்த ஒப்புவமையை ஆய்வு நிலையில் முன் வைத்தவர் துருக்கிய சைப்பிரியாரான திரு சலாகி. ஆர். சொனியல் ஆவார். இந்த ஆய்வுடன் தற்போது தங்கள் கைகளில் பின் வரும் ஆய்வுகளும் உள்ளன. அவையாவன: லண்டனிலுள்ள சிறுபான்மையோர் உரிமைக் குழுவின் (Minority rights group) அறிக்கை, மாட்டின் வோக்கர். (Matin walker) பிரான்சிஸ் வின் (Francis winn) கிறிஸ்ரோபர் கிச்சின்ஸ் போன்ற பிரபல பத்திரிகையாளர்களின் ஆய்வுகள். அனைத்துலக சட்டவல்லுனர் ஆணைக் குழுவின் அறிக்கை: (International Juris Commisson) இவற்றைவிட லண்டனிலிருந்து வெளிவரும் ஈரோஸ் எனப்படும் பத்திரிகை, டாக்டர் எஸ். நவரத்தினம் நியூயார்க் மாநாட்டில் படித்த கட்டுரை, இலண்டனிலுள்ள ஈழ விஞ்ஞான அறிஞர் சபை திருமதி காந்திக்கு கையளித்த விண்ணப்பம்

www.tamilarangam.net



# முதன்முறையாக எதிரொலித்தது

போன்றவை. இவை எனது கருத்தை நீங்கள் விளங்கிக் கொள்ள ஓரளவு துணை செய்யும். இவற்றை தாங்கள் ஆழமாகக் கற்பதன் மூலம் இலங்கையில் உள்ள பிரச்சினை பெரும்பான்மை—சிறுபான்மைச் சமுகங்களிடையே உள்ள பிரச்சினையாக அல்லாமல், இரு தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினை என்பதை உணர்வீர்கள். இதன் மூலம் கடந்த காலங்களைப் போலன்றி தற்போது இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினையாக உடுவெடுத்துள்ளது. அத் தேசியப் பிரச்சினை ஈழமாகும். இங்குதான் எரித்திரியாவினுடைய தேசியப் பிரச்சினையையும் இலங்கைத் தமிழர்களுடைய தேசியப் பிரச்சினையையும் ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

## எரித்திரியாவும் ஈழமும்

திரு கெயிலி. நிகஸி (Hauie Negossi) என்ற இலண்டனிலுள்ள எரித்திரிய ஆய்வாளர் ஈழத்திற்கும் எரித்தியாவிற்கும் உள்ள ஒருமைப்பாடுகள் பற்றி ஆராய்ந்தார். அவர் கருத்தின்படி இரு தேசியங்களும் போர்த்துக்கேய குடியேற்ற வாதத்திற்கு உட்பட்டவர்கள். எரித்திரியாவை ஆட்கொள்வதில் போர்த்துக்கேயர் வெற்றி காணுவிட்டாலும் எரித்திரியா என்ற தேசியம் இருந்ததை ஒப்புக் கொண்டனர். பெலிசா (Balesa) என்ற ஆறு எதியோப்பாவிலிருந்து எரித்திரியாவைப் பிரிததனை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இதே போல் இலங்கையை முதல் ஆக்கிரமித்தவர்கள் போர்த்துக்கேயரே.போர்த்துக்கேயர் வடபகுதியைத் தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர மேற்கொண்ட முயற்சிகள்யாவும் 1615ம் ஆண்டு வரை தோல்வியுற்றன. 1615ல் கடைசி யாழ்ப்பாண அரசு வீழ்ந்தது. (இங்கு இன்னொன்றையும் சேர்க்க விரும்புகிறேன். மாந்தைமுதல் பொலன்னறுவைக்கு மேற்பட்ட பகுதிவரை தென்னிந்தியத் தொடர்புடைய திராவிடர்கள் வாழ்ந்து வருகிறுர்கள் என போர்த்துக்கேய கேர்னல் ஒருவர் குறிப்பிட்டுள்ளார் ) இதுவே இலங்கைத்தீவில் முதலில் வீழ்ந்த அரசாகும். மேலும் தமிழர் வரலாற்றை ஆயும் போது கி.மு.3-ம் நூற்ருண்டிலிருந்து தமிழர்கள் வாழ்ந்து வருவதை அறிய முடிகிறது. அதே போலவே சிங்களவர்களும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்கிடையே ஆதிக்கப் போட்டி ஏற்பட்டது. இவற்றையெல்லாம் கூறி உங்கள் பொறுமையை மேலும் சோதிக்க நான் விரும்பவில்லை.

*அதாவது கி, மு. 3-ம் நூற்ருண்டிலிருந்து கி. பி. 1615 ஆண்டின் கடைசி அரசு வீழுவது வரை "எல்லா சமுகங்களும் போலத் தமிழர்களும் சமுக அரசியல் ரீதியாக ராசதானியும் (Kingdom) அதற்கு கீழ்ப்பட்ட சிற்றரசுகள் என்று சமுகப் பொருளாதார அரசியல் முறையில் உருவாக்கப்பட்டிருந்தார்கள். புவியியல் சமுகமுறையில் மேலிணைக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளையே ஈழம் என்று காலனித்துவ ஆட்சிக்கு முன்பு கூறப்பட்டிருந்தது, இதன் மூலம் ஐரோப்பிய குடியேறற கால ஆட்சிக்கு முன்னரே இலங்கைச் சிறு தீவில் ஈழம் என்ற தேசியம் (State hood) இருந்ததைக் காணலாம். இந்த ஈழம் என்ற தேசம் பல நாடுகளுடன் குறிப்பாகப் பாலத்தீனியருடன் வர்த்தக தொடர்பு கொண்டிருந்தது.*

இங்கு மற்றுமோர் குறிப்பையும் கூற விரும்புகிறேன். கால மாற்றத்தில் ஈழத்திற்கும் பாலத்தீனியத்துக்கும் இருந்த உறவு மாறி ஈழமும் ஏனைய பகுதியும் கொண்ட அத்தீவு காலனித்துவ ஆட்சிக்குக் குட்பட்ட ஒரு காலத்தில் அத்தீவை "செரந்தீப்" என்றும் அழைத்தார்கள். இது ஒரு அராபியச் சொல். இதன் மூலம் அக்காலகட்டத்தில் அத் தீவில் இருந்த அராபியச் செல்வாக்கை உணரலாம். இதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை ஆய்வு செய்யும் போது சில ஆய்வாளரின் கருத்தின்படி துருக்கிய ஒட்டமான் இராச்சியத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்த பாலத்தீனியர்களைக் கிளர்ச்சிக்காரர்கள் என்று நாடு கடத்தியதாகவும், அவர்கள் அங்குக் குடியேறியதாகவும் ஒரு கருத்துண்டு. நான் ஒரு சரித்திர ஆய்வாளன் அல்ல. அதனல் இக்கருத்தைச் சரித்திர ஆய்வாளரின் ஆய்வுக்கு விட்டு விடுகிறேன். இனி மேலும் எரித்தியாவிற்கும் ஈழத்திற்கும் இடையிலுள்ள தொடர்புக்கு வருகிறேன்.

எரித்திரியாவை ஆக்கிரமித்த இத்தாலிய காலனித்துவவாதிகள் போல், போர்த்துக்கேய—ஒல்லாந்த காலனித்துவ வாதிகளும் இலங்கைத்தீவை ஆக்கிரமிப்பதற்கு முன்பு இருந்தது போன்று தமிழர்களையும், சிங்களவர்களையும் தனித்தனியே ஆட்சி செய்தார்கள். இந்த ஆட்சிமுறை 1796-ம் ஆண்டு ஆங்கிலேய காலனித்துவ வாதிகள் காலடி எடுத்து வைக்கும் வரை, நீடித்திருந்தது. எப்படி 1959ல் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் எதியோப்பியாவையும்,எரித்திரியாவை இணைத்து ஆண்டதோ, அதேபோல் 1833லேயே பிரித்தானிய ஏகாதிபத்தியம் சிங்கள-தமிழ்மக்களையும் ஒரு ஆட்சிமுறைக்கு உட்படுத்தினர்கள். அப்படி ஒரு ஆட்சிமுறை ஏற்பட்டபோதும் இரு இனமக்களும் ஒன்றி கலக்க முடியாமலும், அதற்கு ஏற்ற வாய்ப்புகளை அளிக்காமலும் ஆட்சி நடத்தினர்கள். பதிலுக்கு இலங்கையில் வாழ்ந்த தமிழர்களுடைய இனபலத்தைப் பலப்படுத்துவதற்காக—இந்தியாவின் தமிழ்ப் பகுதியான தமிழ் நாட்டிலிருந்து அபிவிருத்தியடையாத மலைப் பிரதேசங்களை வளப்படுத்தி கோப்பி, தேயிலை உற்பத்தி ஏற்றுமதியை உருவாக்கத் தமிழர்களைக் கொண்டு வந்து குடியேற்றினர்கள். பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஒரு நூற்ருண்டு ஆட்சி 1948-ல் முடிவுற்றது. முடிவடையும் போது இலங்கைக்குச் 'சுதந்திரம்' வழங்கிய பிரித்தானிய ஏகாதிபத்தியம் அந்த நாட்டில் வாழும் தமிழர்களுடைய நலனுக்கோ, பாதுகாப்பிற்கோ, எந்த சட்ட வரையறுப்புகளையும் வழங்கவில்லை. அதனல் அன்று தொடக்கம் தமிழர்கள் தமது உரிமைக்காக வாதாடி வருகிருர்கள். ஆரம்பத்தில் 50க்கு 50 என்ற கோரிக்கையாக இருந்து, பின் சமட்டிக்கு உட்பட்ட தமிழரசு கோரியவர்கள் பின் இதுவும் கிட்டாமற் போகவே 1976ம் ஆண்டு முதல் சுயநிர்ணய உரிமைகோரி போராட்டம் நடத்தி வருகிருர்கள். இலங்கைத் தமிழர்களின் முனைப்பான உந்துதல்களுக்கான காரணங்களை மேலும் நான் விபரிக்கையில் அறிந்து கொள்வீர்கள். இதை விபரிக்கும் முன் இலங்கைத் தமிழர்களின் குமுகாய அடிப்படையிலான சில விபரங்களைத் தரவிரும்புகிறேன். 35 இலட்சம் மொத்த மக்கள் தொகை கொண்ட இம் மக்கள், மலையக வாசிகள் 1195368 தமிழ் சோனர்கள் அல்லது இசுலாமியர் 8+5 332, பூர்வீகமாக வாழும் தமிழ்மக்கள் 20,89,791 ஆகும். இவை விரும்பியோ, விரும்பாமலோ பூர்சுவா ஆட்சிமுறை தொகுத்து தந்துள்ள புள்ளிவிபரங்களே.

*இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றுல் பிரித்தானிய ஆட்சியின் பிரித்தாளும் தந்திரத்தைக் காட்டவே. இந்த ஆட்சி தீவிலுள்ள இனங்களிடையே இருந்த பிளவுகளை ஆழப்படுத்தியதுடன், தமிழர் சமுகத்தை எண்ணிக்கை அடிப்படையிலும், மொழி, பண்பாடு அடிப்படையிலும் ஒன்றுபட்டுப் பலமடைய விடாமல் தடுத்த சூட்சுமமே.*

## இலங்கையில் ஏற்பட்ட இனக்குரோதம்

இத் தருணத்தில் இலங்கையில் காலனித்துவ ஆட்சிக்கு முன்னர் இரு சமூகங்களிடையே ஏற்பட்ட இனக்குரோதங்களுக்குப் பின் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காலனித்துவ ஆட்சியின்போது தான் மீண்டும் இரு சமூகங்களிடையே இனக் குரோத அடிப்படையிலான கலவரங்கள் ஏற்பட்டது அதாவது முதலாவது இனக் கலவரம் 1915ம் ஆண்டு ஏற்பட்ட சிங்கள-தமிழர் கலவரத்தில் கூடுதாலகப் பாதிக்கப்பட்டது இசுலாமியத் தமிழ் மக்களே. இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றேர் உண்மையையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சிங்கள இனவாதிகளுக்கும், இசுலாமியத் தமிழர்களுக்கும் ஏற்பட்ட கலவரத்தின் போது தமிழ் பூர்சுவாக்களும், சிங்கள பூர்சுவாக்களும் இணைந்தும் பிணைந்தும் செயல்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றுல் எப்படி எரித்திரியன் பூர்சுவாசி எதியோப்பிய பூர்சுவாசியுடன் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிறதோ, அதேபோல் தமிழ் பூர்சுவாக்களும் சிங்கள பூர்சுவாக்களுடன் பின்னிப் பிணைக்கப்பட்டு வாழ்வதைக் காட்டவே. எப்படி எரித்திரியன் பூர்சுவாக்கள் எதியோப்பியாவில் வேரூன்றியவர்களாகக் காணப்படுகிருர்களோ, அதேபோல் தமிழ் பூர்சுவாககளும் சிங்கள பகுதிகளில் வேரூன்றிவிட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் வெறும் காணி நிலச் சொத்து மட்டுமல்லாமல் ஏகாதிபத்திய முதலாளிய சுரண்டலின் அடிவருடி ஸ்தாபனங்களின் முகாமையாளர்களாக இருப்பதையும் அவதானிக்க வேண்டும். இவர்கள், எப்படி எரித்திரியன் பூர்சுவா எரித்திரிய விடுதலையை எதிர்க்கிறதோ, அதேபோல் ஈழவிடுதலை நாட்டம் கொண்டோரின் எண்ணப்பாட்டிற்கு ஆத்திரப்படுபவர்களாக காணப்படுகிருர்கள். இவர்களின் பிரதிநிதிகள் தான் இன்றைய ஏகாதிபத்திய கைப்பொம்மையாக விளங்கும் சிறீலங்கா ஆட்சியில் மந்திரிகளாக இருக்கிருர்கள். இன்றைய சிறீலங்கா மந்திரிசபையில் தமிழர்கள் நால்வர்கள். இவர்களில் இருவர் சைவ சமயச் சார்பும், இருவர் இசுலாமிய சமயச்சார்பும் கொண்டவர்கள். இந்த வேடிக்கையைப் புரிந்து கொள்வது உங்களுக்கு கடினமாக இருக்காது. ஏன் என்றுல் அரபு நாடுகளிலும், பிற நாடுகளிலும் பாலத்தீனியர் நாடற்றவர்களாகவும், அகதிகளாகவும், அவதியுறும்போது அவர்களுக்காக யாசர் அரபாத் அபுஜிகாட் போன்றவர்கள் போராடும் அதே வேளையில் முஸ்தாபா டுடின் போன்றவர்கள் இசுரேலின் கைப்பொம்மைகளாக-ஏவலாளிகளாக இசுரேலின் ஆட்சிக்குட்பட்ட பாலத்தீனமான மேற்கு ஜோர்தானின் கிராமிய அபிவிருத்தித் தலைவர்களாக இருப்பதை நீங்கள் மறந்தும் மறைக்க மாட்டீர்கள் என்றே நம்புகிறேன்.

இந்த 1915-ம் ஆண்டுக் கலவரத்தின்பின் பல சம்பவங்கள் இசுலாமியத் தமிழர்களுக்கு எதிராக நடந்துள்ளன.வெகு அண்மையில் காலி என்ற இடத்தில் ஏற்பட்ட சம்பவத்தையும். அதற்குமுன் புத்தளம் என்ற இடத்தில் ஏற்பட்ட சம்பவத்தையும் குறிப்பிட்டுக் கூறமுடியும். நான் இங்கு தமிழர்களினுடைய ஒரு சாரரான இசுலாமியர்களுக்கு எதிரான சம்பவங்களை மட்டும் கூறுவதன் மூலம் இங்குள்ள அராபிய—முசுலீம்களின் உணர்ச்சிக்குத் தூபமிடுவதாக நினைக்க வேண்டாம். பதிலுக்கு இதன் மூலம் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை *என்னவென்றுல் ஒரு இனம் மற்றொரு இனத்தை அல்லது ஒரு சமுகம் மற்றொரு சமுகத்தை அடக்கி ஒடுக்க முனையும் போது அடக்கப்படும் இனத்தின் மிக சிறுபான்மைக் குழுவினரையே முதலில் தாக்க முனைகிறது என்ற தர்க்கீக கருத்தையே முன் வைக்கிறேன்.*

ஆகவே 1915-ம் ஆண்டு முதல் இரு இனங்களுக்குமிடையே பூசல்களும் சச்சரவுகளும் இருந்து வந்த போதிலும், ஆங்கில ஏகாதிபத்தியத்தை அகற்ற வேண்டும் என்று நாட்டம் கொண்ட இரு இன மக்களுக்குகிடையே பெரும் கலவரங்களோ மோதல்களோ எற்படவில்லை. ஆனல் "சுதந்திரத்திற்கு" பத்தாண்டுகள் கழித்து 1958-ம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தின் பின் 1962, 1977, 1981-ம் ஆண்டுகளில் மிகப் பயங்கரமான கலவரங்கள் ஏற்பட்டன. இந்த கலவரங்களின் பின்பு இரு இனங்களும் இணைந்து வாழ முடியாது என்று தீர்க்கமாக சிந்திக்கும், இளைஞர்கள் பேராட்ட அணிகள் கட்டி ஆயுதப் போராட்டத்திற்கு தயாராகி வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

8-ம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*3ம் பக்கத் தொடர்ச்சி*

யானால் இன்றைக்குத் தோற்றமளிக்கும் இவர்களது முற்போக்குத் தன்மைகள் 1960 களில் உலகம் எங்கும் நடந்த மாணவர் இயக்க அனுபவங்களையே திரும்பவும் ஈழத்திற்குக் கொண்டு வரும். அதாவது 1960களில் கேபர்ட் மாக்கூஸ் (Herbert, Marcues), ஜீன் போல்சாத்ரே போன்றவர்களால் பிரான்ஸ் சோபோன் (Sorbone) பல்கலைக்கழகத்தில் மையம் கொண்ட மாணவர் போராட்டமானது, உலகத் தலைநகர் எங்கும் பரவி மக்களையெல்லாம் ஆவலில் ஆழ்த்திய அந்தப் புரட்சிகரத் தன்மையும், முற்போக்குத்தனமுமானது இன்று 80 களில் உருத்தடம் தெரியாமல் அழிந்தும், எதிர்த்தன்மை கொண்டதாகவும் மாற்றமடைந்த நிலையைக் காணுகின்றோம் 1903-ம் ஆண்டின் பின் ஹங்கேரியப் புரட்சியின் போது மாணவர்கள் புரட்சிக்கு எதிராக செயற்பட்டதையும், தற்போது பாலத்தீனில் மாணவர் அமைபபான Gups (General union of palestine Students) எப்படி சிக்கல் நிறைநத அமைப்பாகஇருக்கிறதுஎன்பதையும் அவதானிக்கவேண்டும். இன்னும் சொல்லப் போனால் 70ம் ஆண்டுகளில் ஈழத்தின் மாணவர் தலைவர்களாக விளங்கிய சத்தியசீலன், அரியரத்தினம், சபாலிங்கம் போன்றோர் கூட தலைவர்களாக தம்மை வளர்த்துக் கொள்ள முடியவில்லையே? இவ் அனுபவத்துடனேயே இன்றைய மாணவர் இயக்கங்கள் கோணல் மாணல் பார்வை இல்லாமல், ஈயடிச்சான் காப்பி நடவடிக்கை இல்லாமல், முன் ஓடிச் செல்பவர்களாக இல்லாமல், போராட்ட சூழ்நிலைகளுக்கு இயைந்த தன்மைகளுடன் சரியான அரசியல் இயக்கத்தை அடையாளம் காட்டிச் செலவதுடன் தன் செயற்திட்டங்களை மேற்கொள்ளும் போதே புரட்சியில் மாணவர்களும் பங்கெடுக்க முடியும் என்பதை தங்களுக்கு குறிப்பிட வேண்டிய கடமைப்பாடும் எனக்குண்டு.

*வினா: —ஏனைய இயக்கங்கள் பற்றிய திறனாய்வைக் கூறிய நீங்கள் ஈழத்தின் போராட்டத்திறகு எந்த வடிவத்தைக் கையாள விரும்புகிறீர்கள் என்பதைக் கூற முடியுமா?*

**பதில்:** முடியும். இதற்கு முன் தர்க்கீகவாதி என்ற முறையில் சில விபரங்களைக் குறிப்பிடுவது எனது கடமையாகும் ஒவ்வொரு பேராட்டமும் வர்க்கப் போராட்டமே. ஆனால் ஒவ்வொரு போராட்டமும் ''ஒரே மாதிரியானவையல்ல''. ஒன்றைப் பார்த்து ஒன்று பிரதி செய்யும் நிகழ்ச்சியுமல்ல. அல்லது புரட்சி இறக்குமதி செய்யப்படுவதும் அல்ல என்றான் ஸ்டாலின். தத்துவ வித்தகன் மாக்சோ, புரட்சிப் புரவலன் லெனினோ அப்படிக் கூறவுமில்லை. எனவே வரலாற்று ரீதியான போராட்ட வடிவங்களைப் பார்க்குமிடத்து அப்போராட்டவடிவங்கள் அந்த நாடுகளின் இயல்புகளுடன் ஒத்தனவாகவும், அதே வேளையில் புதியனவாகவும் காணக் கூடியதாக இருக்கிறது. உதாரணமாகச் சிலவற்றை நான் கூற வேண்டுமானால் சோவியத் யூனியன் பாட்டாளி வர்க்கத் தலைமையில் கிளர்ந்தெழச் செய்த ஆயுதப் புரட்சியாகவும், செஞ்சீனாவில் விவசாயிகளை இணைத்ததான கிராமங்களிலிருந்து நகரத்தை நோக்கிய கொரில்லாப் போராட்டமாகவும், கியூபாவில் புத்திஜீவிகளைக் கொண்டதான திடீர்த்தாக்குதல் (insurrection) மூலமும் பாலத்தீனியர்கள் கொமாண்டோ முறை (commando attacks) போராட்டமாகவும் வெவ்வேறு வடிவங்களில் எழுந்துள்ளன. அதே போலவே ஈழத்தின் போராட்டமும் புதிய வடிவம் கொண்டதாக அறிமுகப் படுத்தப்படும். (It is a new kind of surgical operation) இவ்வளவே தற்போதைக்கு நான் கூறக்கூடிய எல்லை வரையறை ஆகும்.

*வினா: ஈழத்தின் விடுதலை இயக்கங்கள் ''ஒருங்கிணைப்ப'' தற்கான முயற்சிகள் பற்றி பத்திரிகையில் செய்தி வந்திருப்பதை நீங்கள் அறிந்திருக்கக் கூடும். அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

**பதில்:** இப்பொழுதெல்லாம் ''ஒருங்கிணைப்பு'' முயற்சிகள் பலவேறு இடங்களில் பல வட்டங்களில் நடைபெற்று வருகின்றன. இது ஒவ்வொரு கால கட்டத்தில் ஒவ்வொரு சாராரின் ''நலன் சார்ந்த'' எண்ணப்பாட்டையே பிரதிபலிக்கிறது.

1957-ல் ஐக்கிய முன்னணி கூட மறுத்த தமிழர் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் 1972-ல் கூட்டிணைந்து பின் விடுதலைக் கூட்டணியையும் உருவாக்கினார்கள். பின் தமது பாதைக்கும் நலனுக்கு மேற்ப வெளிநாடுகளில் உள்ள குழுக்களை ஒருங்கிணைக்க ''தமிழர் ஒருங்கிணைப்புக்குழு'' (Tamil Co-ordinating Committee) வைத் தோற்றுவித்தார்கள். அண்மையில் நியூயார்க்கில் உருவாக்கப்பட்ட குழுவில் பெருமளவு கூட்டணி ஆதரவாளர்களே தோற்றுவிக்கப்பட்டுள்ளார்கள். இதே பாணியில் லண்டனில் ஒரு குழு உருவாக்கும் முயற்சிகள் கைவிடப்பட்டுப் பதிலுக்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற பிரச்சாரத்தை மையமாக வைத்து புதிய பிரச்சாரக் கமிட்டி (Campaign for the Release of Eelam political Prisoners) தோற்றுவிக்கப்படடுள்ளது. இவை பொதுவாக பலவேறு குழுக்கள்-நிறுவனங்கள் இணைந்த—இணைக்கப்பட்ட முயற்சியானாலும், வெறும் பிரச்சாரத்தை (Publicity) பயன்படுத்தி தத்தமது எண்ணப்பாட்டையும் வலியுறுத்தி அதன் மூலம் தம்மையும் ஸ்திரணப் படுத்திக் கொள்ள வலிந்து முன்நிற்போர் தான் கூட இருந்துள்ளார்கள்—இருந்தும் வருகிறார்கள். இவர்களுக்கு நாம் சொல்லக்கூடியது இதுதான்; 1903முதல் 1905 வரை போல்சுவிக்கிலிருந்து வெளியேறினவர்களுக்கும், ஏனைய மென்சுவிக்குகளுக்கும் தோழர் லெனின் கூறிய வார்த்தைகளே. ''இல்லை. இநத சந்தர்ப்பத்தில் ஒரு இணக்கமான முடிவு தன்மை பயக்கப் போவதில்லை. எம் மிடமிருந்து பிரிந்து போனவர்களுக்கும்—இந்த இணைப்புக்கள் பற்றிய பிரேரணைகளை முன்வைப் போருக்கும் நாம் கூறக்கூடியது ஒன்றே. நீங்கள் வக்கற்ற நிலையை அடைந்தவர்கள். நீங்கள் பரிதாபத்திற்குரிய—தனிமையாக்கப்பட்ட தனிநபர்கள் உங்கள் காலம் முடிந்து விடடது. இங்கிருந்து எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். (No, a Compromise is nogood here. To those who have gone out and to all who make such proposals we mast say; "you are pitiful isolated individuals; you are bank rupts, your role is played out. Go where you belong from now) என்பதேயாகும். ஆனாலும் ஈழப் போராட்டத்தில் போராட்ட முனைப்புக்கேற்ப ஐக்கிய முன்னணி அமைய வேண்டிய காலம் ஒன்று உண்டென்பதையும் நான் மறுக்கவில்லை.

*வினா: தற்போது தாங்கள் தமிழகத்தில் தங்கியிருக்கிறீர்கள். ஈழ விடுதலை தொடர்பாகத் தமிழகத்தில் நிலை என்ன? தமிழக மக்களின் பங்கு என்ன? இங்குள்ள கட்சிகள் நிலை என்ன? என்பவற்றை விளக்குவீர்களா?*

**பதில்:** இது மிகவும் முக்கியமான வினாவாகும். அதே சமயம் மிகவும் அவதானமாக விடையளிக்க வேண்டிய வினாவுமாகும். மார்க்சிய லெனினியவாதி என்ற முறையில் இங்குள்ள பொதுவுடமைக் கட்சிகள் பற்ற குறிப்பிடுவது இயல்பாக இருக்குமென நம்புகிறேன். எனினும் எனது பதில் இலகுவானதாக அமைந்த போதும் சோகமானதே. 1917-ம் ஆண்டின் ருஷ்யப் புரட்சியை அடுத்து உலகின் சில நாடுகளில் ஒரு வித கிளர்ச்சித் தனமையில் உருவாக்கப்பட்ட பூர்சுவாப் பொதுவுடமைக் கட்சிகள் என்றே இவற்றை நான் கருதுகிறேன். ஏனெனில் லெனினே கண்டித்த பொருளாதாரவாதம் என்ற மயக்கத்தில் மூழ்கித் தொழிற்சங்கம்—சந்தா—தர்ணா' என்ற மாயையில் சிக்கி ''நுண்மாண் நுழைபுலமற்ற'' வெறும் நுனிப்புல் மேய்பவர்களாக இவர்கள் அமைந்து விட்டனர். இதனால் இந்திய மக்களைப் புரட்சிகர பாங்கிற்கு அழைத்துச் செல்லாமல், மக்களிடமிருந்து வெகுதூரம் சென்றுவிட்ட இவர்களால் எமக்கென்ன நன்மையைப் பெற்றுத் தர முடியும் ஆனால், அதே சமயம் புத்திஜீவன்களான இவர்கள் எம்மவர் பிரச்சினையை முன் வைக்க முயன்றதை நாம் மறக்க மாட்டோம் இது தொடர்பாக தோழர் எம். கல்யாண சுந்தரத்தை என்றும் நாம் கருத்தில் கொள்வோம். இனக் கலவரங்களின் போது அதனைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை நாம் பாராட்டுகிறோம்.

இவர்களின் ஆதரவு எந்தளவுக்கு உட்பட்டது என்பதை நாம் துல்லியமாகக் கணித்துள்ளோம்.

அதே சமயம் இன மான உணர்வை ஊட்டிய திராவிடபாரம்பரியக் கட்சிகளை நாம் கருத்தில் கொள்ளாமலிருக்க முடியாது. தமிழ் உணர்வு, தமிழ் உணர்ச்சியாகப் பரிணமிக்க மூடநம்பிக்கைகளற்று பொதுவுடைமைப் பாணியைப் பின்பற்ற வழி சமைத்த பெரியார்—அண்ணா — கருணாநிதி போன்றோரின் தொண்டுகளை மதிக்கிறேன். அந்த பாரபபரியத்தில் வந்தவர்கள் இன்று அரசியல்வாதிகளாக மாறியமையால்—அவர்களது உணர்ச்சிகள் மங்காத பொழுது அவர்கள் நிலை வரையறைக்கு உட்பட்டு இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். எவ்வாறு இருப்பினும் தமிழ் நாட்டின் புத்திஜீவன்கள்—அறிவாளிகள் என்று கருதக்கூடிய அறிஞர்களின் ஒத்துழைப்புடன் எமது பணியை முன்னெடுக்க நாம் முனைகிறோம். ஏகாதிபத்திய எதிர்ப்பு. இந்து சமுத்திர அமைதிப் பிராந்தியம், விடுதலைப் போராளிகளுக்கு ஆதரவு என்ற வகையில் *திருமதி இந்திராகாந்தியின் நடவடிக்கைகளை வரவேற்கும் நாம், அவரது பதவிக் காலகட்டம் ஈழச்சிக்கலைப் பொறுத்தவரையில் தொடர்புடையதாக அமையும் எனக் கருதுகின்றோம்.*

*வினா:- தங்கள் இயக்கத்தின் அனைத்துலக நிலைப்பாடு பற்றி ஏதாவது கூறுவீர்ாளா?*

**பதில்:-** அடிப்படையில் நாம் ஏகாதிபத்தியத்தை வன்மையாக எதிர்க்கிறோம். குடியேற்றவாதம், அதன் எச்ச சொச்சமான நிறவெறி, இனவெறி, நவ-குடியேற்றவாதம் போன்றவற்றின் பரம வைரிகளாகிய நாம் விடுதலைக்குப் போராடும் சர்வதேச இயக்கங்களின் ஆதரவாளர்கள்-பங்காளர்கள் ஆவோம். தமது அரசியல் ஞான சூனியம் காரணமாக எம்மை முத்திரையிட முனைவோருக்கு நாம் கூறக் கூடியது ஒன்றே ஒன்று. இதனையே 60-களில் பிடல் காஸ்ட்ரோவும் (Fidel Castro) குறிப்பிட்டார். ''சீன-சோவியத் பிளவுகள் வரலாறறின் துக்ககரமான நிகழ்வுகள் என்றே நாம் கருதுகிறோம் இப்பிளவுகளில் நாம் பக்கம் சாராமல் இதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் ஏதுமிருப்பின் அவற்றை நாடுவோம். ஆனால் இப்பிரச்சினையின தார்ப்பரியங்களை நாம் உணர்வதோடு மக்களுக்கும் தெளிவு படுத்துவதை யாரும் தடுக்க முடியாது. எமது நிலை தெளிவானது அமெரிக்கத் திரைப்படங்களில் காட்டுவதுபோல் எமது நடவடிக்கைகள் ஏதாவது பக்கம் சார்ந்தவையாகத் தென்பட்டால, அத்தகைய தன்மைகள் உண்மையாகவே தற்செயல் நிகழ்வுகளேயாகும். (அல்லது காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதையாகும்) எது எப்படியிருப்பினும் மனிதர்கள் சுயமரியாதையுடன் வாழ வழி வகுக்கும் சோசலிசத்தின் வெற்றியே எமது வெற்றியாகும். (We choose our position and as they say in American films "any resemblance is Pure co-incidental" what matters to us is the development of socialism to live dignity.)

இவ்வளவு நேரமும் எமது வினாக்களுக்கு பொறுமையாகவும்-ஆழமாகவும்- ஆய்வு முறையிலும் விடையளித்த தங்களுக்கு 'பொதுமை' படிப்பாளர்களின் சார்பில் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*தங்கள் பணி வெல்வதாக!—த. கோ.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2-ம் பக்கத் தொடர்ச்சி...

இக்கட்டுரையை முடிக்கு முன் மதமாற்றத்துக்கும் பணத்துக்கு மிடையிலுள்ள உறவை ஆயவுக்குட்படுத்த வேண்டிய பணி ஒன்று எஞ்சி நிற்கிறது.

நம்மவர்கள் அயல் மதங்களுக்கு மாறிய போது இந்துக்களும் மதம் மாறியவர்கள் 'தாய்மதத்துக்குத்' திரும்பியபோது நம்மில் சிலரும் 'பணம் விளையாடியது' என்று கூறுகின்றனர். திரும்பியவர்கள் பணம் பெற்ருர்களென்று நாம் கருதினோமாயின் முதலில் மதமாறிய போதும் பணம் பெற்றிருப்பார்களென்று நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படியாயின் மதமாற்றத்தின் அடிப்படையில் ஒரு குமுகச் சிக்கல், சாதி ஒடுக்குமுறை, இருக்கிற தென்பதையே நாம் மறுப்பவர்களாவோம். எனவே தான் இந்த 'திரும்பலின்' அடிப்படையில் என்ன உள்ளது நம் நாட்டு மக்களுக்கு உண்மையில் வேண்டியதென்ன, அவர்கள் விரும்புவது என்ன என்பதை நாம் ஆராய வேண்டியவராகிரேம்.

அதே வேளையில் மதமாற்றத்தில் 'பணம் விளையாடுகிறது' என்பதும் முற்றிலும் பொய்யல்ல. மதப்பரப்பல் செய்யவும், புதிதாக மதம் மாறுவோருக்கு சடங்குகள் நிகழ்த்தவும் உடைகள் தைக்கவும் பள்ளிவாசல்கள்கட்டவும், சில வேளைகளில் அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்கவும் பணம் தேவை தான். இதில் முகாமையான கூறு இந்த மதமாற்றங்களை முன்னின்று நடத்துவோர் இந் நிகழ்முறையில் 'கணக்கெழுதி'ச் சுருட்டும் பணம்தான். அவர்களை இப்பணியில் இவ்வளவு ஆர்வத்துடன் ஈடுபடுத்துகிறதே யன்றி மதப்பற்றல்ல. ஆனல் ஏற்கனவே மதத்தில் இருக்கும் எளிய மக்கள் இத்தாகர்களின் மூளைச் சலவையால் மயங்கி நிற்கின்றனர். இசுலாம் மற்றும் கிறித்துவ மதமாற்றங்களில் மட்டுமல்ல அதை எதிர்த்து செயல்படும் இந்து முன்னணி, விசுவ இந்து பரிச்சத்து, இரா. சே. ச. ஆகியவற்றிலும் பணம் இதே பணியைச் செய்கிறது.

இந்தச் சுருட்டல், பற்றிய சேதிகள் இந்து, இசுலாம் மதங்களில் இன்னும் வெளித் தோன்றவில்லை. ஆனல், விரைவில் வெளியே வரும். கிறித்துவத்தில் வெளிவந்து வழக்கு மன்றங்களைத் தேடிச் சென்று விட்டன. இச்சூழலையும் நம் பணியில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அயலக மற்றும் உள்நாட்டு பிற்போக்கு ஆற்றல்கள் நம் நாட்டில் கிளப்பிவிட்டிருக்கும் இக் கொந்தளிப்பை இயங்கியலாக அணுகி இக் கொந்தளிப்பில் எழுப்பிவிடப்பட்டிருக்கும் முற்போக்கு ஆற்றல்களைத் திரட்டுவோம் என்று வேண்டி அமைகிறேன். ★

## தாய் நான் தவிக்கிறேன்

கி.பி. அரவிந்தன்

வானத்தே கழுகுகள்......
காட்டருகே ஓநாய்கள்......
நானே............
வெட்ட வெளியில்
பசித்துப்......பசித்துக்......
தாகத்தால் நா வரண்டு
அடிவயிற்றுக் கனத்துடன்
ஆடைகளே அற்றவளாய்............
மகனே......மகளே......
நீங்கள் தாம் எங்கே?

இரத்தத்தின் வாடையோ
நாசி வழி நாளமெங்கும்
என் குழந்தை ஜனநாயகமோ
சவலையாய்......ஊனமாய்......
தலைகளைக் கழுகுகளும்
கால்களை ஓநாய்களும்
கொத்தியும் குதறியும்.
இரத்தம் சொட்டும் நாக்குடன்
என்பக்கம் இப்போது
நீங்கள் தாம் எங்கே?

உங்கள் தாய் நானன்றே
என்னை ஏன் மறந்தீர்கள்
எங்கே தான் சென்றீர்கள்?
வாருங்கள் வாருங்கள்
தண்ணீர் தர வேண்டாமா?
சோறு ஊட்ட வேண்டாமோ?
ஆடையாவது தாருங்களேன்;
தாமதம் செய்யாதீர்
உயிர்ப்பிச்சை கேட்கிறேன்.

நெல் மணிக் கதிர்களாய்க்
குலுங்கிக் குலுங்கிச் சிரித்தேனே.
சுருட்டுப் புகையாக
உறசாகம் தந்தேனே......
பனையாய், தென்னையாய்
மலை முட்ட நின்றேனே,
கறுத்தக் கொழும்பானும்
நினைக்க நினைக்க இனித்தேனே.
என்ன குற்றம் செய்தேன்?
என்னையேன் தவிக்க விட்டீர்?
இப்போ நான் கர்ப்பமாய்,
இன்னொரு குழந்தைக்காய்,

ஓடி வாருங்கள்—ஓடித்தான் வாருங்களேன்
ஓநாய் அடியுங்கள்
கழுகுகளை விரட்டுங்கள்
சத்திர சிகிச்சை செய்யுங்கள்
குழந்தையைக் காப்பாற்றுங்கள்
மருத்துவிச்சி நீங்கள் தான்
நான் உங்கள் தாயன்றே
தாய் நான் தவிக்கிறேன்.

## ஏன் இந்த பாரபட்சம்?

இலங்கையிலிருந்து திரும்பிய ஈழவர்களுக்கு வேலை வாய்பளிக்க, தமிழ் நாடு அரசு, விவசாயப் பண்ணைக் கழகத்தை தோற்றுவித்ததும், அப் பண்ணைகளில் கடந்த ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக அவதிபுற்று அகதிகளாக வந்தோர் வேலை செய்து வந்ததும் அனைவரும் அறிந்தே.

சுமார் 800 குடும்பங்களுக்கு மேல் பணியாற்றிய இப் பண்ணைகள் நட்டம் காரணமாக அரசு மூட முயற்சித்ததும், ஊழல் வீண்விரயம் காரணமாகவே நட்டம் ஏற்படுகிறது என்றும் புது நிர்வாகத்தின் கீழ் இப் பண்ணைகளை மாற்றினுல் நட்டம் ஏற்படாது என்றும் பண்ணைகளை மூடவேண்டாமென இம் மக்கள் போராட்டம் நடத்தியதும் சென்னை மத்திய சிறைச் சாலையில் சிறை வைக்கப்பட்டதும் அனைவரும் அறிந்ததே, ஆனுல் பண்ணைகள் மூடப்பட்டு விட்டன.

அங்குப் பணியாற்றிய நிர்வாக ஊழியருக்கு இழப்பீட்டுத் தொகையுடன். வேறு பல இலாகாக்களுக்கு மாற்றப்பட்டு திரும்பவும் புதுச் சேவை முறையில் வேலை வழங்கப் பட்டுள்ளது.

ஆனுல் இந்த அப்பாவி அகதிகளாக வந்த மக்களுக்கு மட்டும் இழப்பீட்டுத் தொகையை கொடுத்து எங்காவது ஓடிப் பிழைத்துக் கொள்ளுங்கள் என்று அறிவிப்புச் செய்யப் பட்டுள்ளது. இப் பண்ணைகளை நம்பி வந்த இம் மக்கள் எங்கு போய் வேலை தேட முடியும்?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் நிலைப்பாடாகும். உலகத்தின் அதிசிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்ருன திருகோணமலை ஈழத்தில் அடங்குகிறது என்பதும், ஈழத்தின் விடுதலை சோசலிச முகாமிற்கு வலிமை சேர்க்குமென்பதாலும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானது என்பதாலும் இன்று எழுந்துள்ள ஈழக் கோரிக்கை சகல சிக்கல்களையும் உள்ளடக்கியதாக கருதப்படுகிறது.

எனவே தான் திருப்பதியில் நடந்த மேற்படி மாநாட்டில் பேராசிரியர் ராமச்சந்திரராவ் ''இந்து சமுத்திரம் அதனிலுள்ள வளங்களை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் குடியேற்ற மயப்படுத்தப்படலாம்'' என்ருர். எனவே இதன் தொடர்பில் ஈழம் விடுதலையடைவது இந்து சமுத்திரப் பகுதியின் தன்னுதிக்கத்தையும். இறைமையினையும் நிலை நிறுத்த உதவும் என்று அரசியல் ஆய்வின் அடிப்படையில் இது வரலாற்று இயங்கியல் நியதி என நாம் திடமாக கருதுகிரேம். ★

இவ்வேடு ஏ. கே. வேலன் அன்சன்ஸில் அச்சிடப்பட்டு
திரு. த. கோ. அவர்களால் வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நமது பார்வை

# சிந்தனைப் பொங்கல்

அண்மையில் மூன்று மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல் முடிந்தது. மூன்று மாநிலங்களும் ஓர் உண்மையை உணர்த்துகிறது. இந்திராவின பேராயக்கட்சி தன்னலக்காரர்களின் கூடாரமாகி விட்டது. (மற்ற ஒவ்வொரு கட்சிகளும் ஆட்சிவெறியேறிய ஊழலின் ஓநாய்க் கிடங்குகளாக உள்ளன)

சோவியத்து ஒன்றியத்தின் தோழமையைக் கொண்டுள்ள இந்திய அரசு, நேரு காலத்திலிருந்து செய்த நெடும்பிழையால் நேர்ந்த சிக்கல்களை நீக்கவேண்டும். மொழிப் பற்றையும் இனப்பற்றையும் மொழிவெறியாக இனவெறியாக்கிய பெருமை அனைத்திந்திய அரசியல் பேசிய குறுகிய—அறிவியல்—உலகப்பார்வையற்ற சாதி மதவெறிகளின் கட்சி நடவடிக்கைகளே இன்றை இந்தியாவின் அனைத்துச் சீரழிவுகளுக்கும் காரணமாகும். பொதுவுடைமை என்றாலே தங்கள் வீட்டு மனையாட்டிகளைப் பொதுமகளிராக்குவது என்றஞ்சிய முதலாளியத்தின் கைப்பாவையாக அல்ல எடுபிடி ஏவலராகத் தொடர்ந்து வந்த அனைத்திந்திய பொய்மாயப் புரட்டர்களின் (பல பெயர்களில் வழங்கினும்) செயற்பாடுகள், கட்சிகள்—ஏடுகள்—தேர்தல்கள், ஆட்சிகளைக் கைப்பிடித்த தில்லுமுல்லுகள்—பொய்வாக்குறுதிகள் இழிவான—மலிவான நடிப்புலகின் ஏமாற்று எத்துகள்—அரசியல் கயமைகள் அத்தனையும் அமெரிக்க முதலாளியத்திற்கும்—வெற்றாரவார மேலை நாட்டு நாகரிகத்தின் 'சின்னவீடா'கவும் இன்று மாறிவிட்ட தற்கெல்லாம் மூலமுதல்—நேருவின் பின் வந்த பேராயக்கட்சியின் மொழி—இன—நாட்டின் கருத்துகளின் பால் அக்கறை இன்மையும்—பொருளாதாரச் சீர்மைக் கேடுந்தான்.

இந்தியாவைவிட இருமடங்கு மக்கள் தொகை கொண்ட ஒரு நாடு எப்படி உலகில் தலை நிமிர்ந்து நிற்கின்றது? சோவியத்து நாட்டில் ஏன் மொழி—இனச்சிக்கல் இல்லை? வேலையில்லாத்திண்டாட்டமில்லை? பொதுவுடைமையை ஏற்றுக் கொண்டு நாடுகள் நாளும் நாளும் சிறப்பது ஏன்? அயல் நாட்டுக் கொள்கை என்பது நடுநிலையில் நிற்பது மட்டுமில்லை. அயல்நாடுகளின் மேன்மைத் திட்ட முறைகளை நம் நாட்டில் செயல்படுத்துவதும் தான்.

இந்தியாவிக்கு இடுக்கண் வந்தால் சோவியத்தை நாடுகிற இந்திரா அன்னையே!—இந்தியாவையே இடிந்த கோவிலாக்க ஒவ்வொரு மாநிலத்திலும் கங்காணிகள் கூட்டம் மிகுந்துவிட்டது. இனிச் செய்ய வேண்டுவதென்ன? இந்தியாவை ஒரு சோவித்து ஒன்றிய நாடாக்குக இருக்கிற பகைமிகுந்த—பிற்போக்குத் தனமான—முதலாளியத்தின் ஊது குழலாக—சாதிமத வெறியின் நச்சுப் பாம்புகளாக விளங்குகிற அனைத்துக்கட்சிகளையும் ஒழித்துக் கட்டுங்கள். இல்லையேல் நீங்களும் இல்லை. எண்ணற்ற மக்கள் போராடிப் பெற்ற இந்தியாவும் இல்லை. இடதுசாரிப் பொதுவுடைமையை நீங்கள் ஏற்காத வரையில் இந்தியா வாழ முடியாது. இது எச்சரிக்கையன்று. எண்ணிப்பார்க்கும் அன்புரையே.

த. கோ.

---

5-ம் பக்கம் தொடர்ச்சி.........

### எனது பணிவான வேண்டுகோள்

இவர்களுக்கு மனிதாபிமானமும் நல்லெண்ணமும் கொண்ட உங்களைப் போன்றோர் என்ன செய்யலாம் என்று கேட்பதைப் போல் உங்கள் முக பாவனை எனக்குக் காட்டுகிறது இங்கு இருக்கக் கூடிய வெவ்வேறு தேசிய இன விடுதலைப் பிரதிநிதிகளுக்கும், மனிதாபிமான இயக்கங்களுக்கும் நான் வேண்டுவது ஒன்றே தான்; அதாவது, உங்கள் கைகளில் இருக்கக் கூடிய அறிக்கைகளையும் ஆவணங்களையும் நன்கு படித்து நல்ல முறையில் புரிந்து கொண்டு, அதை உலக அவையில் முன் வைக்க உதவுங்கள் என்பதே. எங்கள் பிரச்சினையை உலக மன்றங்களான ஐ நா. விலும், அதன் சார்பான மன்றங்களிலும் மனிதாபிமான சபைகளிலும் எடுத்துப் பேசுங்கள் என்று தலை பணிந்து கேட்கும் அதே வேளையிலும் இந்த சபைகளோ, மன்றங்களோ எந்தப் பிரச்சினையையும் தீர்த்து விடும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. அப்படித் தீர்க்கப்பட முடியுமானால் பாலத்தீனியர்களும், எரித்திரியர்களும் தங்கள் விடுதலையை என்றோ பெற்றிருக்க வேண்டும். இருந்தும் அம் மன்றங்களுடைய அளப்பரிய கைங்கரியங்களை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால், ஒரு விடுதலை நிதர்சனம் என்றால் அது அந்த மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. அந்த மக்களுக்காக மக்களின் முன்னோடிகள் கட்டியெழுப்பக் கூடிய அவர்களின் பங்களிப்பில் தான் விடுதலை நிதர்சனமாகிறது. அந்த விடுதலை அணி மதம் மற்றும் கூறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இதை ஏன் கூறுகிறேன் என்றால், சில அரோபிய நாடுகளிலுள்ள மத மிதவாதிகள் மதம் என்ற பேரால் இன மாற்றம் செய்ய முனைகிறார்கள் என்பதனாலேயே, ஒரு காலத்தில் கோயில்களையும், பள்ளிவாசல்களையும், விகாரைகளையும் கட்டி அதன் அடிப்படையில் தான் பொருளாதார கட்டுமானம் ஏற்பட்டது என்பது பூர்வீக வரலாற்று உண்மை. இதனாலோ என்னவோ இன்றும் ஜெருசலேத்தை மீட்க பாலத்தீனியர் வெளியிலிருந்து போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையைத் தவிர்க்கச் சமூக — பொருளாதார முறையிலான மேம்பாட்டிற்கு உதவ நல்லெண்ணம் கொண்டோர் முன்வர வேண்டும். இப்படிப்பட்ட ஓர் அணி இலங்கைவாழ் தமிழர்கள் மத்தியில் இருப்பதாகக் கூறிவிட்டுப் போக நான் விரும்பவில்லை. அதற்காக அங்குள்ள இளைஞர்கள் அல்லும் பகலும் அயராது உழைத்து வருகிறார் என்பதை மட்டும் உறுதியாகக் கூற விரும்புகிறேன் இவர்களுடைய சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கு இங்குள்ள பொருளாதார சபைகளின் தலைவர்கள் முன்வர வேண்டும் என்று கோரி இந்த அரிய சந்தர்ப்பத்தை தந்த டியூனிஸ் (Tunis) முற்போக்கு வாதிகளுக்கும், விடுதலை நாட்டம் கொண்ட ஏனைய மற்றோருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். ★

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்காவினாலும், அண்மை இக் கொடுமைச் சம்பவங்களின் மூலம் இசுரேலிலும் உணரப்பட்டிருப்பது அனைவரும் அறிந்ததே. இருந்தும் அண்மை லெபனான் சம்பவங்கள் மத்திய கிழக்கில் ஏகாதிபத்திய கைப்பொம்மைகளுக்கு எதிராக ஒரு உக்கிரமமான போர் நடைபெறுவதைத் தள்ளிப் போட்டுள்ளது இதனால் பாலத்தீனியரின் விடுதலையும் தள்ளிப் போடப்பட்டுள்ளது. இதற்காக ஏகாதிபத்தியம் கை கட்டி நின்று விடாது. இதனைப் பிரதிபலித்தே முன்னாள் உலக வங்கித் தலைவரான திரு. மக்னமாராவின் தென்னாபிரிக்கப் பேச்சு அமைந்துள்ளது. இது எவ்வாறு இருப்பினும் மத்திய கிழக்கில் தமது முழு நம்பிக்கைக்குப் பாத்திரமான நாடாக இசுரேலை வைத்திருப்பதும், அதன் பின்னால் உலக ஏகாதிபத்தியங்கள் அணி வகுத்து நிற்பதற்கும் காரணம் மத்திய கிழக்கின் எண்ணெய் வளமே. இவ் எண்ணெய் வளப் பிராந்தியம் இவர்கள் செல்வாக்கினுள் இருக்க வேண்டுமாயின் பாரசீக வளைகுடாப் பிராந்தியம் அவசியம். இது அவசியமானால் இந்து சமுத்திரத்தில் ஏகாதிபத்தியத்திற்கு நிலையான தளம் வேண்டும். இதுவே டீகோகார்சியா பாரசீக வளைகுடா மேராகாசியாவல் இருந்தாலும், இந்து சமுத்திரத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டது என்பது வெளிப்படையே.

அதேபோலவே தென்னாபிரிக்காவின் ஆதிக்கத்திலுள்ள நமீபியாவின் (தென்மேற்கு ஆபிரிக்கா) சுதந்திரத்தை தள்ளிப் போடுவதற்காக திரை மறைவு முயற்சிகளில் ஏகாதிபத்தியம் ஈடுபடுவதும் அங்கோலாவிலிருந்து கியூபாத் துருப்புகள் வெளியேறினால்தான் நமீபியாவிற்கு விடுதலை என்று இவர்கள் கூறுவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் செயல் என முற்போக்கு உலகம் எதிர்த்த போதும் இவை விளக்கி நிற்பது இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவத்தையேயாகும். நமீபியாவின் எண்ணற்ற கனிய வளங்களைச் சுரண்டுவதற்கும் அதே சமயம் இப் பகுதியில் சோசலிசச் செல்வாக்கு வளர்வதை தடுப்பதுமே ஏகாதிபத்தியங்களின் நோக்கமாகும். இவ்வாறு மத்திய கிழக்கிலும் தென்னாபிரிக்காவிலும் தம்து சுரண்டலை நிலைப்படுத்துவதற்காக டீகோகார்சியாத் தளம் அணுவாயுத—நாசகார ஆயுதங்களை வைத்திருக்கக் கூடிய அளவுக்கு விரிவாக்கப்படுவதும், இதற்காக எதுமறியாத அத் தீவின் சொந்த மக்கள் இடமாற்றப்பட்டு வாடி வருத்தவும் படுகின்றனர். அதே சமயம் மொரீசியசின் புதிய அரசாங்கம் இத் தீவைத் திரும்பப் பெற இந்திரா உதவுவார் என்று நம்பியிருப்பதும், இந்து சமுத்திரம் ஏன் அமைதி மண்டலமாக்கப்பட வேண்டும் என்பதன் சூட்சுமத்தைப் புலப்படுத்துகின்றன.

சில காலத்திற்கு முன்னர் தென் ஆபிரிக்காவிற்கு வருகை தந்த திரு. மக்னமாரா. உதிர்த்த பொன்மொழிகள் இவ் ஏகாதிபத்தியங்களின் வஞ்சக உளப்பாங்கை புலப்படுத்துகின்றன அவர் ஆபிரிக்கக் கண்டத்தில் ஏன் இந்து சமுத்திரத்திலேயே சோவியத் செல்வாக்கு மேலோங்கி நிலை நிறுத்தப்படும் என்று எச்சரித்தார் நமீபியா தென்னாபிரிக்க சிக்கல்களுக்கு விரைவில் தீர்வு காணாவிட்டால் இவ்வாறு நிகழும் என்றார். அதாவது தென்னாபிரிக்க பெரும்பான்மையரான கறுப்பர்களின் விடுதலை இயக்கமான ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் (ANC) முனைப்பான போராட்டம் தென்னாபிரிக்கர்களை சோசலிச மயமாக்குவதோடு சோவியத் ஒன்றியத்தின் உளவுணர்வுக்கும், ஆளாக்கிவிடும் என்று குரலெழுப்பிய அவர் விஜயமும், அதைத் தொடர்ந்து அங்கு நடைபெறும் சம்பவங்களும் தென்னாபிரிக்காவில் சிறுபான்மை வெள்ளை ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டம் முனைப்படையும் என்பதைக் காட்டி நிற்கின்றன. இதை முறியடிக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் மீண்டும் இந்து சமுத்திரத்தைக் கையாளும் என்பது தெளிவு. ஆனால் அதற்கு டீகோகார்சியா மாத்திரம் போதாது. எனவே இலங்கையும் பயன்படுத்தப்படும் என்பது தெளிவு.

இத்தகைய பின்னணியில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்புகளை அவதானிப்பதே அவசியமாகிறது. மத்திய கிழக்கின் போலீஸ்காரனாக ஈரான் இருந்த காலம் போய்விட்டது. இப்போது *இலங்கையை இந்து சமுத்திரத்தின் போலீஸ்காரனாக மாற்ற* அமெரிக்கா முனைகிறது. இத் திட்டம் தெற்கு தென்கிழக்காசியா நாடுகளில் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தும். அண்டை நாடுகளுடன் சுமுகமான உறவை வளர்க்க இந்தியா விரும்பினாலும், இலங்கையோடு சுமுக உறவை வளர்க்க வேண்டுமானால், தமது வெளிநாட்டுக் கொள்கையையே மாற்ற நேரிடும் பாலஸ்தீனப் போரிலும் சரி, போர்ட்டோரிக்கோ சுதந்திரப் பிரச்சனையானாலும் சரி. கம்பூச்சிய வியத்நாம் பிரச்சனையானாலும் சரி முதலாளிய எசமானர்களின் பக்கமே ஜே. ஆர். நிற்கிறார். இது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக்கும் இந்திராவின் உள்ளடக்கத்திற்கும் முரணானது. என்பதை அரசியல் ஆய்வாளர் அறிவர்.

இது தற்போதைய அரசியல் சூழ்நிலை. முன்னர் இருந்த நிலை எவ்வாறு எனக் கேள்வி எழலாம். மலையக தோட்டத்தொழிலாளரை ஆடு மாடுகள் போல் நாடுகடத்த கைச்சாத்திட்ட 64ம் ஆண்டு சிறிமா-சாத்திரி ஒப்பந்தம் ஏற்படுவதற்கான பின்னணி பற்றியும் யாரும் வினா எழுப்பலாம். அப்போதிருந்த அரசியல் சூழ்நிலை முக்கியமானது ஏகாதிபத்தியங்களின் கவனங்கள் வேறு இடங்களிலிருந்தது இன்றுபோல் அன்று இந்தியாவும் இராணுவபலம் உள்ளதாக இருக்கவில்லை. அப்போது சீனாவோடான போர் இலங்கையோடான உறவை சுமுகப்படுத்த நிர்ப்பந்தித்தது. அதன் விளைவே இந்த நாடு கடத்தும் ஒப்பந்தம். ஆனால், தற்போதுள்ள சூழ்நிலை வேறுபட்டுள்ளது என்பதையே மேலே புலப்படுத்தினோம்.

எனவே இத்தகைய நிலையில் இலங்கையின் மலையகத்தமிழர்களை மீண்டும் நாடு கடத்தும் மனிதாபிமானமற்ற ஒப்பந்தம் ஒன்றினை இந்தியா செய்ய முற்படாது என நாம் கருதுகிறோம். இது இந்தியா

7-ம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்